894

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

OFFICE OF THE REGISTRAR
27 NOV
MADRAS

திருநக்ஷத்திரம் கார்த்திகை பூராடம் (25-11-57)

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	262
2. செய்திகள்	265
3. புத்தகவிமர்சம்	266
4. விசிஷ்டாத்வைதிகளும் மதமும் [ஸ்ரீ. உப. சிலுக்கூர் வேங்கடராகவாசார்ய ஸ்வாமி, ஹைதராபாத்.]	269
5. ஸ்ரீ தேசிகனும் சரணாகதிதீபிகையும் [ஸ்ரீ. உப. அத்தி கிருஷ்ணமாசார்ய ஸ்வாமி, சிரோமணி, ந்யாயாத்யாபகர், ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	271
6. ஸ்ரீ அழகியசிங்கரின் டில்லிமாநகர் விஜயமும் ரிஷீகேச ஆந்த்ராச்ரமத்தில் சிலாந்யாஸனமும் [ஸ்ரீமதி மதுரம் – சாந்தா, டில்லி.]	274
7. 43-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	277
8. ஸ்ரீமச்சாரீரகஸுப்ரபாதம் [ஸ்ரீ. உப. வித்வான், சின்னமு சி. ர. ஸ்ரீநிவாஸபட்ராசார்ய ஸ்வாமி திருக்குடந்தை.]	279
9. ஸ்ரீ ஆளவந்தார் – 2. [ஸ்ரீ. உப. தி. ஈ. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, M.A.L.T., ஸம்பாதகர் பிரின்ஸிபால், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]	281

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur. Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 16 } ஹேவிளம்பி ௵ கார்த்திகை ௴ { ஸஞ்சிகை 11

'அஹோபிலே கருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதானம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||'

210745

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபதஸக்தானாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது முதுரை. ஒருவருடைய வெளித்தோற்றம், அவர் உட்கருத்தை வெளியிடுகிறது என்பதுதான் இதன் கருத்து. உள்ளும் புறமும் ஒருமிக்க உயர் நிலையில் இருத்தல் அவசியம். அறிவாளிகள் இதை அறிவர். ஒப்புக்கொள்வர். அறிவாளிகளின் வெளித்தோற்றம் இதை நிரூபிக்கும்.

மஹான்களை தரிசிக்க நேர்ந்தால் இதை நன்கு உணரமுடியும். ஒருவிதமான தேஜஸ் அவர்களைச் சுற்றியும் காணப்படும். இது ஒருவிதமான ஆகர்ஷண சக்தியாகும். மஹான்கள் மன:பூர்வமாக நம்புவதையே வெளியிடுகிறார்கள். வெளியிடப்படும் கருத்துக்களிலிருந்தும் அவர்களை மஹான்கள் என்று புரிந்துகொள்ளுகிறோம். ஆகவே உட்கருத்தைப்போலவே வெளித்தோற்றமும் முக்யமானதாகவே தீர்மானிக்கவேண்டியிருக்கிறது.

வெளித்தோற்றத்துக்கு மாறுபட்ட உட்கருத்தை உடையவனை, ருஜுபுருஷனாகக் கருதுவதற்கில்லை. ஒருவன் தன் கொள்கைகளுக்குத் தகுந்தபடி தன் தோற்றத்தை அமைத்துக்கொள்ளுகிறான். தேச, கால பேதங்கள் கலந்திருத்தலால் மாறுபாடுகளும் இவைகளில் தோன்றக்கூடும்.

உதாரணமாக ஒரு தேசத்தினரின் உடையை எடுத்துக்கொண்டு பார்த்தால், இது விளங்கும். உஷ்ணநாடுகளில் பருத்தி ஆடை அணிவதும், அவைகளை நல்ல ஜலத்தில் சுத்தம் செய்து உலர்த்துவதும், அதற்குத் தக்க முறையில் நீண்ட வஸ்த்ரமாக, (தைய்த்த நிஜார் போல் இல்லாமல்) அணிவதும், குளிர்தேசத்தில் தையத்த நிஜார்களையும், கம்பளி ஆடைகளையும் அணிவதும், முன் கூறிய கருத்துக்களை உறுதிப்படுத்துகின்றன.

வெய்யலில் சென்று திரும்புகிறவன் குளிர் பானத்தை விரும்புவது இயற்கைதான். இந்நிலையில் குளிர்பானத்தை விரும்புகிறவன் கௌரவத்துக்காகவே விரும்புகிறான் என்று கூறுவது சரியாகாது. அதேபோல்தான் குளிர்தேசத்தில் கம்பளி ஆடைகளை விரும்புவதும். ஆயினும் சில ஸந்தர்பங்களில் வெய்யலில்கூட கம்ப்ளியைத் தேடுவதும், அதே காலத்தில் உஷ்ண ஜலத்தை விரும்புவதும் அவசியமாகலாம். இவ்விதம் நடை, உடை, பாவனைகளில் பல காரணங்களினால் மாறுபாடுகள் தோன்றுகின்றன. அவைகள் ஸஹஜமாகவே தோன்றுகின்றன. செயற்கையினால் தோன்றினாலும் ஸஹஜமாகவே பாவிக்கப்படுகின்றன.

இராணுவத்தைச் சேர்ந்தவர்களுக்கும், போலீஸ் சிப்பந்திகளுக்கும் குறிப்பிட்ட உடையை விதிப்பதின் காரணம் என்ன? ரயில்வே சிப்பந்திகளுக்கு உடையைப்பற்றிய விதிகள் ஏன்? இவ்விதம் பல்வேறு உத்யோகங்களுக்கு உடை ஸம்பந்தமான விதிகளின் நோக்கங்கள் என்ன? இவைகளை நாம் ஆராய்ந்து பார்த்தால் பல உண்மைகள் புலனாகும். குறிப்பிட்ட உத்யோகங்களில் சேர்ந்தவர்கள் என்ற ஒருவித பொது உணர்ச்சி உண்டாக்குவது, அந்தந்த உத்யோகத்தில் உள்ளவர்களுக்கு பழக்கத்தில் ஸௌகர்யத்தை உண்டாக்குவது, இம்மாதிரியான அடிப்படையான நோக்கங்கள் காணப்படும். வ்யாயாமத்தில் ஈடுபடுங்காலத்தில் வஸ்த்ரத்தை கச்சமாக உயர்த்தி அணிவதால் ஸௌகர்யம் ஏற்படும்.

அரைக் கால் சட்டை போட்டுக்கொள்வதால் ஸௌகர்யம் இம்மாதிரி காலங்களில் உண்டாகும். இம்மாதிரி தத்துவங்களை விட்டு விட்டு கால் சட்டை அணிவது கௌரவம் என்றோ, ராணுவ உடை அணிவதினால் உயர்ந்தவன் என்றோ ஒருவன் கூறிக்கொள்ளமுடியுமா?

ஸமீபகாலம் வரையில் சுதந்திர இயக்ககாலத்தில் காந்திக்குல்லாய் அணிவதால் உயர்ந்தவர்கள் என்று, அவ்விதம் செய்தார்கள். குறிப்பிட்ட குறிக்கோள்களைப் பின்பற்றுகிறவர்கள் என்று கருதப்பட்டனர். அவ்விதம் உள்ளவர்கள் உயர்ந்தவர்கள் என்று இறுமாப்புடன் இருந்தார்கள் என்று கூறுவது ஸரியாகாது. காந்திக்குல்லாய் அணிந்தவர்கள் எல்லோரும் தேசியப்பற்று உள்ளவர்கள் என்றும், பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு விரோதிகள் என்றும், ஆகவே அவர்கள் தண்டிக்கத் தக்கவர்கள் என்றும் வெலிங்டன் போன்றவர்கள் எண்ணினார்கள். இம்மாதிரி எண்ணம் எவ்வளவு அநீதியானது என்பதை அறிவுள்ளவர்கள் உணர்ந்தார்கள். அக்காலத்தில் மனம் விட்டுங் கூறியுள்ளார்கள். தேசியப் பற்றுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் அந்நியர்களை வெறுப்பவர்களாகவோ, தண்டிக்கத் தக்கவர்களாகவோ கருதப்படவேண்டியவர்கள்தானா? இது எவ்வளவு தாழ்ந்த கருத்து.

லௌகிக விஷயங்களில் இம்மாதிரி நடை, உடைத் தோற்றங்கள் இருப்பதுபோல், மத ஸம்பந்தப்பட்ட விஷயங்களிலும் காணப்படுகின்றன. இவைகளும் காலக்ரமங்களில் பல உந்த நோக்கங்களைக் கொண்டு ஏற்பட்டவைகளே.

இந்துமதத்தில் ஸந்யாஸம் ஏற்றுக்கொண்டவர்கள் காவி உடை அணிகின்றனர். பௌத்த பிக்ஷுக்கள் மஞ்சள் ஆடை தரித்துக்கொள்கின்றனர். சீக்கியர்கள் தங்கள் மதக்கோட்பாடுகளுக்கு உகப்ப ஆடையையும் சிகையையும் சீர்படுத்திக்கொண்டிருக்கின்றனர். கிருஸ்துவர்களும் முகம்மதியர்களும் குறிப்பிட்ட உடை அணிகின்றனர். குல்லாய் அணிகின்றனர். இவைகள் எல்லாம் மதச்சின்னங்களே. கிருஸ்துவர்கள் சிலுவை அணிந்துகொள்வதினால் கிருஸ்துவின் புனித ஆத்மாவை ஞாபகப்படுத்திக்கொள்கின்றனர். இவ்விதமிருக்க, இவர்களில் ஒவ்வொரு மதத்தினரும் இறுமாப்பினால் இவ்விதம் அணிகின்றனர் என்று சொல்வது ஸரியாகுமா? இதேபோல் இந்து மதத்தில் உள்ளவர்கள் வஸ்த்ரங்களைக் கட்டிக்கொள்வது, அதிலும் குறிப்பிட்டவர்கள் கச்சமாக அணிவது தங்களுடைய தெய்வவழிபாடுகளுக்குத் தக்கபடி முகத்தில் புண்ட்ரங்களை அணிந்துகொள்வது, சிகை வைத்துக்கொள்வது முதலிய பழக்கங்கள் அவரவர்களில் பக்திக்கும், ச்ரத்தைக்கும், நோக்கத்துக்கும் தகுந்தபடி ஏற்படுத்தப்பட்டவைகள். வர்ணாச்ரம தர்மங்களைப் பின்பற்றிவரும் நிலையிலுங்கூட இம்மாதிரி பழக்கங்கள் ஜாதிவேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டவைகள் அல்ல. எல்லா ஜாதியினரும் பின்பற்றும் மதச்சின்னங்களேயாகும். பகவத்பக்தியையே குறிக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. இவைகள் எல்லாம் இறுமாப்பினால் செய்யப்படும் கார்யங்கள் என்றோ, தாங்களே உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை வெளியிடுவதற்காகச் செய்யும் ஸாதனங்கள் என்றோ கூறுவது பிழையாகும். தாங்கள் குறிப்பிட்ட வழியைப்பின்பற்றுகிறவர்கள் என்பதையே காட்டவும், தங்களுடைய கொள்கைகளில் பற்றுதலை நிலைநாட்டிக்கொள்ளவுமே இவ்விதம் செய்கிறார்கள் என்பதுதான் உண்மை.

தங்களுடைய உயர்வை வெளிப்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்பதில் கூட ஓரளவு உண்மை இருக்கலாம். அதை நாமும் ஒப்புக்கொள்ளுகிறோம். காந்திக்குல்லாய் தரிப்பவர்கள் ஸத்யமே ஜயிக்கிறது என்றும், அஹிம்ஸையே தத்துவம் என்றும் தாங்கள் நம்புவதாகவும், அதனால் தங்களுடைய கொள்கைகள் அடங்கிய கக்ஷியே உயர்ந்தது என்று கூறுவதில் எவ்வளவு நியாயம் உண்டோ அவ்வளவு நியாயம் இதரகொள்கைகளை வெளியிடும் வாதிகளுக்கும் உண்டல்லவா? காந்திக்குல்லாயுடன் இருப்பதால் இறுமாப்பு உண்டாகிறது என்று கூறுவதில் எவ்வளவு நியாயமின்மை இருக்கிறதோ, அவ்வளவு அநீதி ஏற்படுகிறது. நில

கம் முதலியன அணிபவர்கள் அதனுல் இறுமாப்புடன் இருக்கிறுர்கள் என்ற அபிப்ராயத்திலும் இதேபோல் ஆஹாரவிஷயத்திலும் எதை உட்கொள்ளலாம், எதை உட்கொள்ளக்கூடாது என்று நியமங்களை ஏற்படுத்திக்கொண்டிருப்பது புத்திசாலித்தனத்துக்கு அறிகுறியில்லை என்று கூறும் பிரஸித்தபுருஷரின் கருத்தை நாம் கண்டிக்காமல் இருக்க முடியவில்லை.

மதுபானம் மனிதனின் அறிவை அழிக்கவில்லையா? அதிக காரமான பதார்த்தங்களை உட்கொள்பவர்கள் ஆத்திரகுணமுள்ளவர்களாக இருக்கவில்லையா? வெங்காயம் போன்ற பதார்த்தங்களை உட்கொள்வது ஸாத்விகபுத்தியை பேதலிக்கும் என்பது உண்மையல்லவா? டாக்டர்கள் ஆஹார நியமங்களை, காலத்திற்கேற்ப விதிக்கவில்லையா? இவைகளின் உட்கருத்தென்ன? ஆஹாரம் குணங்களை பாதிக்கும். நாம் சாஸ்த்ர விசாரம் செய்யவில்லை. சாஸ்த்ரத்தில் நம்பிக்கையில்லாத பெரியவர்களுக்குத்தான் எடுத்துறைக்கிறோம்.

சில காலத்துக்கு முன் காலஞ்சென்ற ப்ரபல காங்கிரஸ்வாதியாகிய டாக்டர் ராஜன்சென்னை சுகாதார மந்திரியாக இருந்த ஸமயம், ராஜ்யத்தில் உள்ள போஜன விடுதிகளில் எச்சில் செய்து சாப்பிடுவதால் பலவித தொத்துவ்யாதிகள் ஏற்படுவதாகவும், இதைக் கண்டிக்க வேண்டும் என்றும், சென்னை, பெரம்பூரில் ஒரு ப்ரபல போஜனசாலை தொழிலாளர் கூட்டத்தில் கூறியுள்ளார். இவ்விதம் ஆஹார விஷயத்தில் உட்கொள்ளவேண்டிய பொருள்கள், உட்கொள்ளவேண்டிய நேரம், விதம் இவைகள் ஒவ்வொன்றுக்கும் அடிப்படையான பல சுகாதார தத்துவங்கள் அமைந்துள்ளன. விஸ்தார பயத்தாலும், ஸந்தர்ப்பங்கள் இடங்கொடுக்காததாலும் இங்கு கூற இயலவில்லை. ஆகவே ஆஹாரவிஷயத்தில் சட்டதிட்டங்கள் கட்டுப்பாடுகள் கூடாது என்று கூறுவது நாகரிகஸமுதாயத்திற்கு உகந்ததல்ல. சரீரபோஷணைக்கும், ஆத்மீகவளர்ச்சிக்கும் தக்கபடி ஆஹாரநியமங்களை நமது முன்னோர்கள் செய்து கொண்டார்கள். இதன் அடிப்படைத் தத்துவங்களை உணர முடியாதவர்களும் உணர்ந்து கொள்ள இஷ்டப்படாதவர்களும், இவைகளைக் கண்டிக்கப் புகுவதுதான் ஆச்சர்யம்.

இதேபோல் நமது ஸமூஹத்தில் யாரை மணந்துகொள்வது என்பதிலும் என் கட்டுப்பாடு என்கிறுர் இம்மாதிரிப் பெரியவர். சில தினங்களுக்கு முன் செய்தித் தாளில் ஒரு விஷயம் நமது கவனத்திற்கு வந்தது. உலகத்தில் உள்ள பெரிய அறிவாளிகளின் திறமைகளை இழந்துவிடாமல் பிற்காலத்திற்காக அவர்களுடையதிறமைகளைசெயற்கைஸாதனங்களினுல் உலகத்தில் காப்பாற்றி, பிறகும் உற்பத்தி செய்வதற்காகப்ரபல விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடந்து வெற்றி பெற்றுவருகிறுர்கள் என்பது தான். நாம் வேதவாக்கை நம்புவது போல் இக்காலத்தவர்கள் இவைகளை நம்புகிறுர்கள் அல்லவா? நமது வேதகாலத்து நாகரிகமோவெனில் அறிவாளிகளின் அறிவுத் திறனை இயற்கையாகவே காப்பாற்றி வந்தது. செயற்கை ஸாதனங்கள் முடிவில் வெற்றியைக் கொடுக்காது, கிடைக்கக் கூடிய வெற்றியும் இயற்கையால் ஏற்படும் வெற்றிக்கு நிகராகாது என்பதை இக்காலத்தவர் அறிய முடியாதுதான் ஆகவே விவாஹ விஷயங்களில் கூட நியமங்கள் ஏற்பட்டதின் நோக்கங்களும் ஸமூஹ முன்னேற்றத்திற்காகவேதான் என்பதை இவர்கள் அறியமுடியவில்லை.

ஆஹாரம், நித்ரை, பயம் இவைகள் மனிதனுக்கும், மிருகங்களுக்கும் பொதுவானவைகளே. அறிவுத் திறன்தான் மனிதனை மனிதனுக்குகிறது. ஒரு காளைக் கன்று வளர்ச்சி அடைந்தபின்னர் காலக்ரமத்தில் தன் தாயை மறந்து பசு என்று மட்டில் அறிந்துகொண்டு தன் ப்ரவ்ருத்திகளில் ஈடுபடுவது (அந்த இனத்துக்கு) ஸஹஜமானதுதான். இதே போல் மனிதனும் மிருகப்ராயமாக மாறிவிட முடியுமா? இம்மாதிரியான நுட்பமான தத்துவங்களை நன்கு ஆராய்ந்தறிந்த நம் முன்னோர்கள் மதத்தின் பெயரால் உயர்ந்த கருத்துக்களை நமக்கு உபதேசித்தனர். மதத்தில் நம்பிக்கை உள்ள காலங்களில் மதத்தின்பேரில் சபதமிட்டு உபதேசித்தனர். காலப் போக்

கில் மனிதனின் குணத்தில் மாறுபாடுகள் தோன்றவே அவன் ஒவ்வொரு கார்யத்தையும் தன் கருத்துக்குத் தக்கபடி ஆராய்ந்து அபிப்ராயங்கூற முற்பட்டான். இதன் முடிவுதான் பல்வேறு கருத்து வேற்றுமைகளும், ஸமூஹத்தில் ஒற்றுமையின்மையும்.

இவைகளுக்கெல்லாம் அடிப்படைக்காரணம் ஒன்றுதான், அதை நாம் நன்கு உணர வேண்டும். அதாவது நம் ஸமுதாயத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட விதத்தில் நைபுண்யம், அதாவது ஸாமர்த்யம் உண்டு. அதை உபயோகித்து ஸமூஹ முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்.

ஆத்மதத்வவிவேகம், ராஜநீதி, ஸமூஹநியதி என்று நமதிடையே பலவித ப்ரவ்ருத்திகள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் அடிப்படை ஒரே ரீதியில் அமைந்திருப்பதாக நாம் கருத முடியாது. ஸமூஹநியதி என்பது பொது நலனுக்குப் புறம்பான எல்லாவற்றையும் ப்ரதானமாகக் கருதுவது. ராஜநீதி என்பது சாணக்ய தந்த்ரமாகும். அதாவது பொருளாதாரத்துறையிலும், மற்றத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஸம்பாதிக்க முற்படுவது. ஆத்மீகவிவேகம் என்பது இம்மையையும் மறுமையையும் இடை தூக்கி பரிசீலனை செய்து பேரின்பத்துக்கும், அழியாத பரம ஸுகத்திற்கும் வழி தேடிக் கொள்வதாகும். ஒவ்வொரு துறையிலும் ஈடுபடுபவர் மற்ற துறையில் உள்ளவர்களின் குறிக்கோள்களை மனதிற்கொண்டு தங்கள் கார்யங்களைப் பின்பற்றி பிறருக்கு ஸதுபதேசம் செய்ய வேண்டும். இம்மாதிரியான நிலவரங்களைக் கொண்டுதான் வேததர்மம் எனப்படும் ஸநாதன தர்மம் (வர்ணாச்ரம தர்மம்) நம் நாட்டில் வேரூன்றி இருந்தது.

ஆத்மதத்வவிசாரத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் வழியை விட்டு அரசியலில் ப்ரசாரம் செய்வதை நவீன காலத்தவர் விரும்பமாட்டார்கள் அல்லவா? அதேபோல் அரசியல் வாதிகள் எவ்வளவு ப்ரஸித்தி பெற்றவர்களாயிருப்பினும் தங்களுக்குப் புறம்பான ஸநாதன தர்மவிசாரங்களில் ஈடுபட்டு ப்ரசாரம் செய்வதும் அதுவும் தப்பு ப்ரசாரம் செய்து குறை கூறி வருவதும் ஸமூஹநலனுக்கு உகந்ததல்ல என்பதை அவர்கள் உணரவில்லையே என நாம் வருந்துகிறோம். அரசியலில் அத்விதீயர்களாக இருக்கலாம். ஆனால் ஆத்மதத்வவிவேகத்தை அடிப்படையாகக் கொண்ட மதவிஷயங்களில் தலையிடுவதும் அபிப்ராயம் கூறுவதும், கண்டிப்பதும் விரும்பத் தக்கதல்ல. அவர்கள் இதற்கு தகுதியுடையவர்களுமல்ல.

—:0:—

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசார்யஸ்வாமியின் நிர்யாணம்

நமது ஸித்தாந்தத்தில் ப்ரபல பண்டிதராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமான், அன்பில் கோபாலாசார்யஸ்வாமி பரமபதித்தார் என்பதைக் கேட்டு நாம் மிகவும் வருந்துகிறோம்.

பிறந்தவர் இறப்பர் என்பது உண்மையாயினும் ஸித்தாந்த ஸ்தாபனத்தில் உதவக்கூடிய மஹநீயர் எவ்வளவு காலம் ஜீவித்திருந்து ஸித்தாந்த ப்ரவசனத்திற்கு உதவுகிறார்களோ அவ்வளவும் நமது ஸமூஹ முன்னேற்றத்திற்குக் காரணமாகிறது. அம்மாதிரி நிலைநமக்கு அளிக்கப்பட்டிருந்தது தடைபடுமாயின் நாம் வருந்தாமல் இருக்கமுடியுமா. ஸாஹித்

(தொடர்ச்சி 268 வது பக்கம்)

ஸ்ரீ:

புத்தக விமர்சனம்

ஸ்ரீமதாசார்யஸ்தவ:

(புதுக்கோட்டை ஸமஸ்தான தானாதிகாரி) வித்வான், ஸ்ரீ. உப. காளி, ரங்காசார்யஸ்வாமீ.

ப்ரசுரகர்த்தா

ஸ்ரீமதஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்கேத்யாதி விசேஷண விசிஷ்டராயெழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் வடதேசஸஞ்சாரகாலத்தில் பாரததேசத்தின் தலைநகராகிய டில்லி நகரத்திற்கு விஜயம் செய்த ஸமயம் ஸமர்ப்பிக்கப்பட்ட ஸ்வாகத பத்ரிகையாகும்.

ஸ்ரீமதாசார்யஸ்தவ: என்கிற இக் க்ரந்தத்தின் கர்த்தாவாகிய ஸ்வாமி ஒரு ப்ரஸித்த பண்டிதர். தென்னாட்டில் வித்வான்களை ஆதரிப்பதில் பெயர் பெற்றது புதுக்கோட்டை ஸமஸ்தானம். அந்த ஆஸ்தானத்தில் ப்ரதி ஸம்வத்ஸரமும் நவராத்ரி காலத்தில் மதத்ரயத்திலும் வித்வான்களுக்கு யதோசிதம் ஸம்பாவனைகள் வழங்கப்பட்டதுண்டு. ப்ராசீன பண்டிதர்களில் மேற்படி ஸதஸ்ஸில் அங்வயிக்காதவர்களே கிடையாது. அப்பேர்ப்பட்ட பண்டித ஸதஸ்ஸில் அத்யக்ஷராக பலகாலம் எழுந்தருளியிருந்தவர் இந்தஸ்வாமி, மதத்ரய வித்வானுமாவார்.

ஸமஸ்தானத்தின் மறைவினால் ஸதஸ் நின்றது. இல்லாவிடில் இந்த ஸ்வாமி தத்காலமுங்கூட அந்த ஸ்தானத்தை அலங்கரித்தே வந்துகொண்டிருக்கக் கூடியவர்.

இந்த ஸ்வாமி பல க்ரந்தங்களை வெளியிட்டுள்ளார். ஸமீபத்தில் நமக்குக் கிடைத்திருக்கும் க்ரந்தம் 'ஸ்ரீமதாசார்யஸ்தவ:'

இந்த ஸ்தவத்தின் மூலம் நமக்குத் தெளிவாவது ஆசார்யபக்தி. இந்த ஸ்வாமியின் ஆசார்யபக்தியை வெகுவாக நாம் கேட்டிருக்கிறோம். இரண்டு ஸம்வத்ஸரங்களுக்கு முன் திருக்குடந்தையில் ஸ்ரீமாலோலவித்வத்ஸதஸ் நடக்கும் ஸமயம் எழுந்தருளியிருந்து ஸ்ரீமதழகியசிங்கரின் திருக்கல்யாணகுணங்களைப் பற்றி வெகுவாக உபந்யஸித்தார். அதே போல் ஸமீபத்தில் ஹ்ருஷீகேசத்தில் ஸ்ரீமதழகியசிங்கர் ஸங்கல்பமஹோத்ஸவத்திற்கு எழுந்தருளியிருந்த காலத்திலும் பல தடவைகள் நேரில் சென்று ஸ்ரீமதழகியசிங்கரை தெண்டன் ஸமர்ப்பித்து ஸ்ரீமதழகியசிங்கரின் திருக்கல்யாணகுணங்களில் ஈடுபட்டு பக்திபரவசராவதுண்டு என்று நாம் கேள்விப்பட்டதுண்டு.

இதன் உண்மை இந்த க்ரந்தத்தில் நன்கு புலனாகும். 'நிந்தாஸ்துதி' என்று பெரியோர்களும் சாஸ்த்ரஜ்ஞர்களும் கூறும் ரீதியை இந்த ஸ்வாமி பெரும்பாலும் பின்பற்றியிருப்பதிலிருந்தே ஸ்ரீமதழகியசிங்கரிடம் இந்த ஸ்வாமிக்கு உள்ள பக்த்யதிசயம் புலனாகும். இந்த ந்யாயத்தை மனதிற்கொண்டுதான் இந்த ஸ்தவத்தின் உட்கருத்தை நன்கு அறிய இயலும். இல்லாவிட்டால் அயதார்த்தஜ்ஞானம் உண்டாகலாம். ஆகவே இதை முதலில் மனதிற்கொள்ளவேண்டும்.

திவ்யப்ரபந்தத்தில் உள்ள பத்து பாசுரங்களைப் பொறுக்கி எடுத்து அதன் கருத்துக்களை நன்கு புகட்டும்படியான ரீதியில் தன் ச்லோகங்களில்சிலவிடங்களில் அழகாகவமைத்துள்ளார்.

ஸ்ரீமதழகியசிங்கரின் பூர்வாச்ரமந்தொடங்கி இதுவரை நடந்த ஸம்பவங்களை இக் க்ரந்தத்தில் ஆங்காங்கு அமைத்திருக்கிறார்.

ஸதாசார்யகடாக்ஷத்தாலே பரமபுருஷார்த்தங்கிட்டுவதை மனதிற்கொண்டு ஆசார்யன் எம்பெருமானைவிட உயர்ந்தவர் என்ற (பூர்வாசார்யர்களின்) ஸ்ரீநிகமாந்தமஹாதேசிகனின் திருவுள்ளத்தையுமநுஸரித்து முதல் ச்லோகத்திலேயே இந்த ஸ்வாமி சரணாகதி சாஸ்த்ரத்தையநுஸரித்துக் காட்டுகிறார்.

ஸ்ரீமதழகியசிங்கர் பூர்வாச்ரமத்தில் (உப்புலியப்பன் ஸந்நிதியில்) திருவிண்ணகரத்தெம்பெருமானிடம் பக்திபரவசராய் பலவித கைங்கர்யங்கள் செய்துகொண்டும், வேதப்ரபந்த அத்யயனாதிகளைப் பூர்த்தி செய்து ந்யாயாதி

சாஸ்த்ராப்யாஸங்களை முடித்துக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதியில் வேதாந்தசாஸ்த்ராப்யாஸகால க்ஷேபாதிகளை முடித்துக்கொண்டு ஸ்ரீக்ராமத்தில் எழுந்தருளியிருந்ததை எல்லாம் க்ரமமாக விஸ்தரித்திருக்கிறார்.

ஸ்ரீ அஹோபிலமடத்தில் பூர்வகச்ரமத்தில் பெரிய பெருமாளுக்குத் திருவாராதனம் செய்துகொண்டு எழுந்தருளியிருந்ததை வர்ணித்துள்ளார். ஆச்ரமஸ்வீகாரம் செய்துகொள்ள நேர்ந்த விஷயத்தைக் குறித்து எக்காரணத்தாலோ வஸ்துஸ்திதிக்கு மாறுபாடாக வர்ணித்துள்ளார்.

ஸ்ரீ அஹோபிலமடத்து ஆஸ்தானத்திற்கு இந்த ஸ்ரீ அழகியசிங்கரை பூர்வாச்ரமகாலத்திலேயே வெகுவாக எல்லோரும் எதிர்பார்த்து பிரார்த்தித்து வந்தார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் ஆச்ரமஸ்வீகாரம் ஆனகாலத்தில் அது திடீரென்று எதிர்பாராமல் ஏற்பட்ட ஸம்பவமாகும். ஸ்ரீ மாலோலவித்வத் ஸதஸ்ஸுக்கு தேவனார்விளாகத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமியை எழுந்தருளும்படி, விசேஷ ஸ்ரீமுகம் அனுப்பி ஸ்ரீ அழகியசிங்கர் அனுக்ரஹித்தாயிற்று. அந்த காலத்தில் ஸ்ரீ அழகியசிங்கரின் அபிலாஷையை இதரர்கள் அறியவே இல்லை. தேஹ அஸ்வாஸ்தையால் ஸ்ரீமதழகியசிங்கர் ஸ்ரீ ஸ்வாமியை ஆஸ்தானத்திற்கு எழுந்தருளும்படி ஸ்ரீ மாலோல ஸதஸ் முடிந்த பிறகுதான் நியமித்தாயிற்று. அதுஸமயங்கூட நிச்சயப்படவில்லை. அடியோங்கள் போல் ஸ்ரீமதழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவத்திற்குச் சென்றிருந்தவர்களுக்குக்கூடத் தெரிவிக்கமுடியாமல் இரண்டு மூன்று தினங்களில் அறிவிப்பதாக ஸ்ரீநியமனமாகியிருந்தது. அது ஸமயம் ஸ்ரீ ஸ்வாமி பித்ரு ச்ராத்தம் செய்யவேண்டி வந்தது. அதையும் திருவள்ளூரிலேயே செய்யும்படி ஸ்ரீநியமனமாயிற்று. பிறகுதான் ஆச்ரமஸ்வீகாரம் நிச்சிதமாயிற்று. அதன்பிறகுகூட ஸ்ரீஸ்வாமியின் ஸஹோதரர் ஸ்ரீ. உப. வீரராகவாசாரியர்ஸ்வாமி முதலியவர்கள் வந்து ஸ்ரீமதழகியசிங்கருடன் இந்த ஸங்கர்ப்பத்தில் வேண்டாம் என்றும் மாத்ருகைங்கர்யாந்தரம் நியமிக்கவேணும் என்றும் வெகுதூரம் பிரார்த்தித்தார்கள். ஆனால் ஸ்ரீந்ருஸிம்ஹன் ஏற்கனவே ஸங்கல்பித்தபடியே நடந்தேறியது. இவைகள்தான் நடந்த விஷயங்கள். இந்த ஸ்தவத்தின் (க்ரந்த) கர்த்தா இந்த ஸம்பவத்தை மாற்றி அமைத்துள்ளார். மாதாவின் அனுமதியை ச்ரமத்துடன் ஸம்பாதித்துக்கொண்டு எழுந்தருளியதாக வர்ணிக்க வேண்டிய காரணம் அதிகமில்லை. தன் புத்ரனைச் சான்றோன் எனக் கேட்டதாய் ஸந்தோஷிப்பது போல் மாதாவின் பெருமையையும், ஆத்மதத்வவிவேகத்தையும் விளக்க வர்ணித்துள்ளார் போலும்.

மற்றும் பூர்வாசார்யர்களைக்காட்டிலும்உயர் நிலையில் எழுந்தருளியிருப்பதாக பதே பதே வர்ணித்திருப்பது சற்றுஅதிவாதமென்றுகூட சிலருக்குத் தோன்றினால், அப்படி அல்ல. ஏற்கனவே கூறியதுபோல ஸ்ரீமதழகியசிங்கரின் குணாதிசயங்களில் ஈடுபட்டபடியால் நிந்தாஸ்துதி வ்யாஜத்தினாலே இந்த ஸ்ரீ அழகியசிங்கரின் பெருமைகளையும் இம்மாதிரி ஸ்ரீ ஆசார்யோத்தமனை நமக்கு உகந்தருளிய பூர்வாசார்யர்களையும் பரம்பரையாகப் புகழ்கிறார் இந்த ஸ்வாமி என்று கொள்ளவேண்டும்.

'வேறொன்றும் நானறியேன்', 'தேவுமற்றறியேன் குருகூர்நம்பி பாவினின்னிசை பாடித் திரிவனே' என்று மதுரகவியாழ்வார் கூறவில்லையா. இதர பூர்வாசார்யர்களையோ எம்பெருமானையோ தூஷித்ததாகவோ எடுத்துக்கொள்ளலாமா? சிவபக்தனாகிய அர்ஜுனன் கிருஷ்ணபரமாத்மாவின் பெருமையை உணரமுடியாமல் இருந்த ஸமயமும் உண்டல்லவா. அதனால் பகவத்பக்தியில் குறைவு அர்ஜுனனிடம் இருப்பதாகக் கூறமுடியுமா. இம்மாதிரி நியாயங்களினாலேயே ஸ்ரீமதழகியசிங்கரின் திருக்கல்யாணகுணங்களின் விசேஷங்களையும், ஸ்ரீமதழகியசிங்கரின் அதிமானுஷமான ஜைத்ரயாத்ரையையும் விவரமாகப் பாடியுள்ளார்.

மிகவும் அழகாக அமைந்துள்ள இந்த ஸ்தோத்ரகாவ்யத்தில் சிற்சில விடங்களில் பக்திப்ரவாஹ காரணத்தினால் போலும் அவஸரம் காணப்படுகிறது. மூன்றாவது பத்யத்தில் **ग्रामे वासः** என்பது **ग्रामे वासी** என்றும் அறுபத்திநான்காவது பத்யத்தில் **संस्तूय** என்பது **संस्तुत्य** என்றும், எண்பதாவது பத்யத்தில் **मोदं** என்பது **मोदां** என்றும் தொண்ணூற்று ஒன்றாவது பத்யத்தில் **विरच्य** என்

பது **विरचय्य** என்றும் அமைந்திருந்தால் இன்னும் அழகாக இருக்குமோ என்று தோன்றுகிறது.

'प्रहषोडशवर्षशतं என்ற ச்ருதிவாக்யத்தை ஸ்ரீஸ்வாமி தன் பத்யத்தின் எண்ணிக்கைக்குத் தக்கவாறும், பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருந்து ஸ்ரீமதழகியசிங்கர் நம்மை அனுக்ரஹித்தருளவேணும் என்று பிரார்த்தித்திருப்பது உசிதமேயாகும். ஆயினும் இந்த ச்ருதி வாக்யத்தையே விட்டு வெகுவாக உபயோகத்தில் இருக்கும் **'शतायुः पुरुषः'** என்றும் ஆழ்வார்கள் அனுஸந்திப்பது போல பல்லாண்டு பாடியிருப்பினும் வெகு அழகாக அமைந்திருக்கும்.

பக்திபாரவசப்பட்டவனுக்கு பக்தியில் தாத்பர்யம், கானத்தில் அல்ல என்பதற்கு பதினாறு, எண்பத்து நான்கு, எண்பத்து ஐந்து முதலிய ச்லோகங்கள் உதாரணங்களாகும்.

பொதுவாக இவ்வளவு உயர்ந்த பக்திபாரவசமான பத்யங்களையுடைய காவ்யத்தையும் நாம் கேட்பதும், அனுஸந்திப்பதும் நமக்கு ச்ரேயஸ்ஸை உண்டாக்குமென்பதில் ஸந்தேஹமில்லை. இம்மாதிரி ஒரு ஸங்கர்ப்பத்தை நமக்கு ஏற்படுத்திக்கொடுத்த இந்த ஸ்வாமிக்கு நமது க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். **[ஸம்பாதகர்.]**

ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ ஃ

265ம் பக்கத் தொடர்ச்சி

யம், ஸாமான்யசாஸ்த்ரம், பூர்வோத்தர மீமாம்ஸாசாஸ்த்ரங்கள், நவீன ரீதியில் பட்டப் படிப்பு முதலிய ஸகல விதத்திலும் பாண்டித்யம் பெற்றிருந்த மஹான் பூர்த்தி செய்யமுடியாதபடி ஒரு நஷ்டத்தை நமக்கு உண்டாக்கிவிட்டு, எம்பெருமானுக்கு உகப்பான நித்ய கைங்கர்யம் செய்யும் பாக்யத்தை அடைந்தார். இந்த மஹானின் குடும்பத்தினருக்கு நமது மன:பூர்வமான வருத்தத்தை தெரிவித்துக்கொள்வது தவிர நாம் வேறு என்ன செய்ய இயலும்.

ஸம்பாதகர்

ஸ்ரீ அஹோபிலமடம் திருவனந்தபுரம்

ஸ்ரீ அஹோபிலமடம் [திருவனந்தபுரத்தில்] புரட்டாசி திருக்கேட்டையன்று ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தேறியது.

வேத, ப்ரபந்த, க்ரந்தபாராயணங்களும் வீதி உத்ஸவங்களும் அதற்கு முன்னதாக பத்து தினங்கள் வெகு நேர்த்தியான முறையில் நடத்தப்பட்டன.

சாத்துமறையன்று கேரள கவர்னர், ஆஸ்திகோத்தமரும், ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ரதான சிஷ்யர்களுள் ஒருவருமான ஸ்ரீமான். ராமக்ருஷ்ணராவ் அவர்கள் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு விஜயம் செய்து கோஷ்டியில் அந்வயித்தார்.

ஸ்ரீ அஹோபிலமடம்
திருவனந்தபுரம்

K. G. கோபாலக்ருஷ்ணமாசாரியர்.
கௌரவ ஏஜண்டு

ஸ்ரீ:

விசிஷ்டாத்வைதிகளும்- மதமும்

सज्जनशिरस्सरोजैर्मण्डितपदपङ्कजद्वयं दिव्यम् ।
मान्नृहरिकारिसूनोः प्रतिफलतान्मे सदाहृदादर्शे ॥

பரமகாருணிகனான ஸர்வேச்வரன் அனேக ஸஹஸ்ரவருஷங்கள் மஹாப்ரளயத்தில் வடபத்ரசாயியாக யோகநித்ரையிலிருந்து அசிதவிசிஷ்டங்களாய் கேவலம் தமோரூபமாக தன்னிடத்தில் லயித்திருக்கும் ஜீவராசிகளை கடாக்ஷித்து ‘கரணகளேபரயோகம் விதரஸி வ்ருஷசைலநாத கருணே த்வம்’ என்பதுபோல் தயையால் இவைகளுக்கு ‘வைஷம்யநைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்’ என்று வ்யாஸர் சொல்லியபடி கர்மாநுகுணமாக சரீரேந்த்ரியாதிகளைக் கொடுக்கத் திருவுள்ளம்பற்றி ‘தத்ஸ்ருஷ்ட்வா-ததேவாநுப்ராவிசத்’ என்கிறபடி தான் உலகத்தை ஸ்ருஷ்டி செய்து அதில் தான் ப்ரவேசித்து இப்படி ப்ரம்மாதி பிபீலிகாந்தமாக ஸ்ருஷ்டித்த உலகத்தை ஆளுவதற்கு முக்கியமாக வேண்டிய அநாதியான வேதமாகிற ஸாமக்ரியை சதுர்முகப்ரம்மாவுக்கு உபதேசித்து யதார்த்தமான வேதார்த்தம் குலையாமலிருப்பதற்கு தான் வ்யாஸராக அவதரித்து அவரடியாக வேதத்திற்கு வ்யாக்யானரூபங்களான இதிஹாஸபுராணங்களைச் செய்துவைத்தார். இதையே ‘இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ருப்ஹயேத் । பிபேத்யல்பச்ருதாத் வேதோ மாமயம் ப்ரதரிஷ்யதி’ ॥ இதிஹாஸபுராணங்களால் வேதார்த்தத்தை அறியவேண்டும். வேதந்தின் ஓர் பாகத்தை மட்டும் கேவலம் தெரிந்துகொண்டு வேதத்திற்கு அபார்த்தம் செய்யாமலிருப்பதற்காக’ என்று ப்ரமாணம் கூறுகிறது. வேதம் தர்மார்த்த, காமமோக்ஷங்களாகிற சதுர்விதபுருஷார்த்தங்களுக்கு ஸாதனமானது. இதில் ஆத்யந்தங்களான தர்மம், மோக்ஷங்கள் முமுக்ஷுக்களுக்கு மிகவும் உபாதேயங்கள். மூன்று புருஷார்த்தங்களும் நான்காவது புருஷார்த்தத்திற்கு உபகாரகம். அர்த்தகாமங்களும் ஏகாந்திக்கு பகவத்பாகலதாசார்யர்களுடைய ஆராதனத்திற்காக பரம்பரையா உபகாரங்களே. அர்த்தத்தினால் பகவத்பாகவதாராதனம் செய்து புண்யமென்று சொல்லப்பட்ட பகவதநுக்ரஹத்தை ஸம்பாதிக்கலாம். சாஸ்த்ரநிஷித்தமல்லாத கர்மங்களும் ஏகாந்திக்கு உபாதேயங்களே.

தர்மம் என்பது அலௌகிகமான ச்ரேயஸ்ஸுக்கு ஸாதனமென்றும், வேதம் எதைசெய் என்று சொல்லுகிறதோ அதுவும் தர்மமென்றும், ப்ரமாணம் கூறுகின்றது. ஸந்த்யாவந்தனம், பஞ்சமஹாயஜ்ஞம், பகவதாராதனம் முதலியவை வேதத்தில் செய்யவேண்டியதாகச் சொல்லப்பட்டவை. ஆகையால் இவை தர்மங்கள். ஸ்வர்க்கத்தை இச்சிப்பவன் ஜ்யோதிஷ்டோமயாகம் செய்யவேண்டும் என்று வேதம் சொல்லியிருப்பதால் யாகாதிகள் தர்மங்கள். பல அபிஸந்தி இல்லாமல் பகவத்ப்ரீத்யர்த்தமாக யாகாதிகள் செய்யுமாகில் அதுவும் தர்மமாகவும் உபாதேயமாகுமென்றபடி. ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞாநம் எப்படி முக்யமோ அப்படியே கர்மாநுஷ்டானமும் முக்யமானது. வித்யாதிஷ்டான தேவதையானது ப்ராஹ்மணனைப் பார்த்து ‘வித்யா ஹ வை ப்ராஹ்மணமாஜகாம, கோபாயமா, சேவதிஷ்டே ஹமஸ்மி அஸூயகாயாந்ருஜவேऽயதாய ந மா ப்ரூயா வீர்யவதீ ததாஸ்யாம்’ ஓ! ப்ராஹ்மணரே! நான் உமக்கு நிதிபோல் இருக்கிறேன். நீர் என்னை ரக்ஷிக்கவேண்டும். பணத்தைத் திருடர்களிடம் விடாமல் பத்திரமாய் பாங்கில் வைத்துக் காப்பாற்றினால் அது நமக்கு ஸமயத்தில் உபயோகப்படுவதுபோல் வித்யையும் நம்மைரக்ஷிக்கும். ஆனால் அதை நல்ல இடங்களில் வைத்து ரக்ஷிக்கவேண்டும். வைக்கக்கூடாத இடங்களிலும், திருப்பிக் கொடுக்க சக்தி இல்லாதவனிடமும் பணத்தைக் கொடுக்க ஒப்பாததுபோல் என்னையும் அஸூயாளுவாக இருப்பவனுக்

ருஜுபுத்தியில்லாதவனுக்கும் ச்ரத்தையில்லாதவனுக்கும் உபதேசிக்கவேண்டாம். நான் சொல்படி இப்படிச் செய்தீரேயானால் நான் வீர்யமுடையவளாய் இருப்பேனென்று சொல்லுகிறது. கர்மமும் ப்ராஹ்மணனுக்கு முக்யமானது. கர்மம் என்பது செய்கை. நம்முடைய செய்கையினால் அது உண்டாகிறபடியால் புண்யபாபங்களுக்கு கர்மம் என்று பெயர் உண்டு. நல்லகார்யத்தைசாஸ்திரம் செய்என்று விதிக்கிறது. அதை செய்ததினால் புண்யம் ஏற்படுகிறது. சாஸ்திரத்தில் செய்யவேண்டாம் என்று சொல்லியதை செய்ததினால் பாபம் ஏற்படுகிறது. இந்த கர்மத்தை கீதாசார்யர் 'ந த்யாஜ்யம் கார்யமேவ தத்' என்று அருளிச்செய்தார். கர்மத்தை விடக்கூடாதென்று மாத்திரம் சொல்லாமல் செய்யவேண்டியதே என்று ஏவகாரார்த்தத்தாலும் காட்டுகிறார். 'ஆப்ரயாணாத் தத்ராபி ஹி த்ருஷ்டம்' என்று ஸூத்ரகாரரும் அறுதியிட்டார். கர்மங்கள் நித்யமென்றும், நைமித்திகமென்றும் இருவகைப்பட்டவை. நித்யமென்பது ஸந்த்யாவந்தனாதிகள். இவைகளைச் செய்தால் விசேஷமான புண்யம் கிடையாது. செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்கும். க்ரஹணஸ்நானம், தர்ப்பணம் முதலியவை நைமித்திகங்கள். இவைகளைச் செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்கும். யஜ்ஞாதிகள் காம்யநைமித்திகங்கள் இவைகளைச் செய்யாவிடில் பாபம் ஸம்பவிக்காது. இவ்வாறே பகவத்கைங்கர்யங்களும் ஆஜ்ஞை, அனுஜ்ஞை என்கிற பேதத்தால் இருவகைப்பட்டவை. ஔபாஸனம் செய்தல் மெய்பேசுதல், பிறருடைய ஸ்த்ரீயை தாயைப்போல் நினைத்தல், பகவதாராதனம் முதலியவை ஆஜ்ஞா கைங்கர்யங்கள் இவைகளைச் செய்யாமலிருந்தால் பாபம் ஸம்பவிக்கும். பகவானுக்காக கோபுரநிர்மாணம், பகவானுக்காக புஷ்பத்தோட்டம் வைத்து மாலை சட்டுதல் பகவானுடையபுறப்பாட்டில்அனுயாத்ரைசெய்தல்முதலியன அனுஜ்ஞா கைங்கர்யம் என்று சொல்லப்படும். இவைகளை சக்தி உள்ளவன் செய்யலாம். செய்யாமலிருந்தால் பாபமில்லை. மஹாபுண்யசாலியான உபரிசரவஸு என்கிற அரசன் மந்திரங்களை ஜபித்துக்கொண்டும், பஞ்சமஹாயஜ்ஞத்தால் பகவானை ஆராதித்துக்கொண்டு பகவதாராதனமும் செய்துகொண்டு அநந்யப்ரயோஜனமாக பகவானை ஆராதித்து வந்தான். அதனால் பகவான் பரிதுஷ்டனாய் அவ்வரசனுக்கு ஏற்பட்ட ஓர் சாபத்திலிருந்து அவனை விடுவித்து முன்போல் ஆகாசமார்க்கத்தில் போகும்படி பெரியதிருவடியைக்கொண்டு செய்து வைத்தார். பிறகு அவ்வரசன் ப்ரஹ்மலோகம் சென்றான். இவ்வாறே அர்த்தகாமங்களும் மோக்ஷஸாதனங்கள். அர்த்தத்தினால் பகவத்பாகவதாராதனத்தை நன்றாய் செய்து அதனால் பகவத்ப்ரீதியை ஸம்பாதிக்கலாம். தானம் செய்தால் சத்ருக்களும் மித்ராராவார் என்று ச்ருதி சொல்லுகிறது. காமம் என்பது இச்சை. ஸ்வதாரவிஷயத்தில் இது பகவதாஜ்ஞையே ஆகும். 'ஸ்வதாரநிரத:' என்றும், 'ருதுகாலாபிகாமீ ச' என்கிறதுபோன்ற ச்ருதிகளும் 'ப்ரஜாதந்தும் மா வ்யவச்சேத்ஸீ:' என்கிற ச்ருதியும் சொல்லுகிறபடியும் காமமானது யுக்தமே. பகவானுடைய திருவடிகளில் ஸதா பக்தியும், அந்த ஜ்ஞானமும் ஸதாவேண்டுமென்கிற அபேக்ஷையும் அதர்மமல்ல. இதையே நம் நிகமாந்தமஹாதேசிகன் ரஹஸ்யத்ரயஸாரத்தில் 'தத்பாதபக்திஜ்ஞாநாப்யாம்' என்று ப்ரமாணத்தால் விவரித்தார். இப்படி ப்ராஹ்மணர்களுக்கு ஜ்ஞாநமென்பதும் கர்மமென்பதும் இரண்டு இறக்கைகள். இக்காலத்தில் ஜ்ஞாநமென்கிற இறக்கையைக்கொண்டே பறப்போம் என்று சொல்லுகிறவர்களுடைய கார்யம் ஸபலமாகுமா? ஒரு இறக்கையைக் கொண்டு எப்படிப் பறக்க முடியும்? இவ்வாறு ப்ரதி ஒரு மனிதனும் ப்ரஜாபதிபர்யந்தபான ஆனந்தத்தையும், மார்க்கண்டேயன் போல் ஆயுஸ்ஸையும் ஸம்பாதித்து வர்ஷஸஹஸ்ரங்கள் அனுபவித்தாலும் 'ஸ்வர்க்கேபி பாதபீதஸ்ய' என்கிறபடி தேஹாவஸாநகாலம் கிட்டியபோதே நாம் யார்? எங்கே வந்தோம்? எங்கே போகப் போகிறோம், நமக்கு மறுபிறப்பு உண்டா என்கிற எண்ணங்கள் உண்டாகின்றன.

(தொடரும்)

ஸ்ரீ:

"ஸ்ரீ தேசிகனும், சரணாகதிதீபிகையும்"

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஆச்ரிதர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஆச்ரிதர்களும் 'பின்னானார் வணங்கும் சோதி' என்கிறபடி பின்னுள்ளார்களும் உஜ்ஜீவிக்கும் பொருட்டு கோயில், திருமலை, பெருமாளகோயில் போன்ற திவ்யஸ்தலங்களில் அர்ச்சாரூபியாய் ஸேவை ஸாதித்தருளுகிறான். அதில் மூன்றாவதான பெருமாளகோயில் என்பது காஞ்சிபுரத்தைக் குறிப்பதாக ஸ்ரீவைஷ்ணவப் பெரியோர்களின் ஸங்கேதம். அக் காஞ்சீ என்பது அத்திகிரி, வெஃகா, அட்டபுயகரம், காமாஸிகா, திருத்தண்கா என்பது போன்ற பல பிரிவுகளைக் கொண்டது. அதில் திருத்தண்கா என்பது விளக்கொளி எம்பெருமான் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திவ்ய ஸ்தலத்திற்குப் பெயர். தேசிகன் அவதரித்த ஸ்தலமும் இதுவே. இந்த ஸ்தலத்தை நம்மாழ்வார் 'அம்பூந்தேனிளம் சோலையப்பாலது எப்பாலைக்கும் சேமத்ததே' (திருவிருத்தம் 26) என்று பாடியுள்ளார். ஆழ்வார்களுள் பின்னிட்டவரான திருமங்கையாழ்வாரும் திருநெடுந்தாண்டகம் 'முளைக்கதிரை என்கிற பாசுரத்திலும், பெரிய திருமொழி 10,12, 'பொன்னை' என்கிற பாசுரத்திலும் இத்தலத்தைப் பாடியுள்ளார், மேற்கூறப்பட்டுள்ள இவ்விருவாழ்வார்களும் தேசிகனின் அவதாரம் இங்கு நேரிடப்போகிறது என்பதை ஸூசகமாக வெளியிட்டதாகக் கூறும் பெரியோர்களும் உண்டு. மஹான்களுடைய அவதாரம் பின்னால் வெகுகாலம் கழித்து ஏற்படப்போவதை மஹரிஷிகளும் 'மாசின் மனந்தெளி முனிவர் வகுத்தவெல்லாம் மாலுகந்தவாசிரியர் வார்த்தைக்கொவ்வா' என்கிறபடி மஹரிஷிகளையும் அதிசயித்த ஆழ்வார்களும் பாவி ஸூசகமாக (முன்கூட்டியே) பாடி மகிழ்வதைக் காண்கிறோம். ஸ்ரீமத்பாகவதத்தில் பாகவதோத்தமர்களான ஆழ்வார்களின் அவதாரம் 'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா: | க்வசித் க்வசிந்மஹாபாகா: த்ரமிடேஷு ச பூரிச: || தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ' என்று ப்ரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது போல நம் தர்சனஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரின் திரு அவதாரமும், ஸ்ரீபாஷ்யகாரருக்கு வெகு காலம் முற்பட்டவரும் மயர்வறமதிநலம் பெற்றவருமான ஸ்ரீநம்மாழ்வார் அருளிய திருவாய்மொழியில் பொலிக, பொலிக பதிகத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டிருப்பதாக அகில ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸங்கேதத்தைக் காண்கிறோம். அதைப்போல ஸ்ரீதேசிகனின் திருவவதாரமும் இந்த திவ்யஸ்தலவிஷயமான பாசுரத்தில் ப்ரஸ்தாபிக்கப்பட்டுள்ளதென்று ஸ்ரீவைஷ்ணவசான்றோர்களின்கொள்கை. இவ்விஷயத்தைத் திருமங்கையாழ்வார் நம்மாழ்வாரைவிட அதிகமாகவே குறித்திருக்கிறாரென்றும் கூறலாம். 'பொன்னை மாமணியையணியார்ந்தோர் மின்னை வேங்கடத்துச்சியில்கண்டு போய் என்னையாளுடை யீசனை யெம்பிரான் றன்னை யாம் சென்று காண்டும் தண்காவிலே' என்று ஸர்வஜ்ஞனிடத்தில் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணின திருமங்கைமன்னனின் பாசுரம். இப்பாசுரத்தை உற்று நோக்கினால் திருவேங்கடமுடையான் திருத்தண்காவில் (புரட்டாசித் திருவோண நன்னாளில்) தூப்புல் மாபுருடனாக அவதரிக்கப்போகிறார் என்று பொருள் ஏற்படுகிறதல்லவா? இத்தலத்திற்கு ஆழ்வார்களின் பாடல் பெற்ற பாக்யம் மாத்திரமின்றி ஆசார்யச்ரேஷ்டர்களின் அவதாரஸ்தலமாக அமையப்பெற்ற பாக்யமும் கிடைத்தது. 'தண்' என்றால் குளிர்ச்சி (பொருந்திய) கா சோலை. ஆகவே குளிர்ச்சி பொருந்திய சோலையை உடையது இந்த ஸ்தலம் என்று முடிந்தது. இதற்கே ஹிமோபவநம் என்று வடமொழி வ்யவஹாரம். இதைத் திருவுள்ளம்பற்றியே நம்மாழ்வார் 'அம்பூந்தேனிளஞ்சோலை' என்று அருளினார். இத்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமானின் திருநாமம் 'விளக்கொளி எம்பெருமான்'. தீபப்ரகாசர் என்பது இவ்வெம்பெருமானது வடமொழித் திருநாமம். ஸ்ரீதேசிகன் இவ்வெம்பெருமான் விஷயமாக 'சரணாகதிதீபிகை' என்று ஒரு ஸ்தோத்திரம் அருளிச்செய்திருக்கிறார். இது 59 ச்லோகங்களைக் கொண்டது. இதில் பகவானுடைய ஸ்வரூபம், குணம் இவைகளும், ஜீவனுடைய உத்க்ராந்தி ப்ரகாரமும், அர்ச்சிராதி மார்க்கங்களும், பகவத்ப்ராப்திக்குக்காரணமான பக்தி

ப்ரபத்திகளின் ஸ்வரூபமும் அதன் அவாந்தர பேதங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளன. இதற்கு வரதராஜபஞ்சாசத்வேகாஸேதுஸ்தோத்திரம் அஷ்டபுஜாஷ்டகம், காமாஸிகாஷ்டகம் என்பதுபோல் தீபப்ரகாசஸ்தோத்ரம் என்று வ்யவஹாரம் உண்டாகாமல் இந்த ஸ்தோத்ரத்தின் கடைசி ச்லோகத்திலுள்ள 'தீபப்ரகாச சரணாகதி தீபிகாக்யாம்' என்கிற பாதத்தினால் சரணாகதி தீபிகை என்று வ்யவஹாரம் உண்டாயிற்று. இங்கு சிலர் 'முக்யம் ச யத்ப்ரபத்கம் ஸ்வயமேவ ஸாத்யம் தாதவ்யமீச க்ருபயா ததபி த்வயைவ' [முக்யமான, ஸ்வயம் ஸாத்யமான (ஸ்வநிஷ்டையான) ப்ரபத்தியை பரமக்ருபையினால் தேவரீரே அனுக்ரஹிக்க வேண்டும். என்கிற ச்லோகத்தை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீ தேசிகன் தீபப்ரகாசரின் ஸந்நிதியில் சரணாகதியை அனுஷ்டித்து தத்பரீவாஹமாக இந்தஸ்தோத்திரம் அருளிச்செய்தபடி என்றும், மற்றும் சிலர் ஸ்ரீதேசிகன் தேவப்பெருமாள் ஸந்நிதியில் (ந்யாஸதசகமுகத்தினால்) சரணாகதி அனுஷ்டித்து அதை 'ஸம்ஸாராऽவர்த்த' என்னும் ச்லோகத்தினால் உலகத்திற்குக் காட்டினபடி, என்றும் கூறுகின்றனர். அதற்கு ப்ரமாணமாக ந்யாஸவிம்சதியில் இந்த ச்லோகத்திற்கு அவதாரிகையான 'உக்தம் உபாயம் ஸாக்ராஹ்ய ஸ்வானுஷ்டானமுகேந நிகமயதி' என்கிற ஸ்வாமி வாக்யத்தையே சொல்லுகின்றனர். இம்மாதிரி ஸ்வாமியின் ஸ்தோத்திரங்களிலுள்ள [பின்புள்ளாரின் அனுஸந்தானத்திற்காக அருளிச் செய்யப்பட்ட] (வேகாஸேது ஸ்தோத்திரத்திலுள்ள 'சரணமுபகதாஸ்ம:' என்பதையும் (அஷ்டபுஜாஷ்டகத்திலுள்ள) 'சரணம் ப்ரபத்யே' என்பதையும், (காமாஸிகாஷ்டகத்திலுள்ள) 'உபாஸே' அல்லது 'ச்ரயாமி' என்பதையும் கவனிக்குங்கால் ஆங்காங்கு மோக்ஷார்த்தமான ப்ரபத்தி அனுஷ்டித்தார் என்று கூற வேண்டிவரும். ஆகையால் இவைகள் பொருந்தாது. தீபப்ரகாசஸ்தோத்ரம் என்று திருநாமம் சாத்தாததன் காரணத்தை ஸ்ரீதேசிகனின் ஸ்தோத்திரங்களின் திருநாமங்களிலுள்ள சிற்சில ஸம்ப்ரதாயங்களை அனுஸரித்து ஒருவாறு சொல்லலாம். ஸ்துத்யனுடைய (பகவானுடைய) திருநாமகடிதமாய் சில ஸ்தோத்திரங்களையும் பகவானின் குணமானதயை முதலியவைகளையும் ப்ராஸாதநேஹது வான சரணாகதியையும் விஷயமாகக்கொண்டு சில ஸ்தோத்ரங்களையும் 'பல' விசேஷத்தைக் காரணமாகக்கொண்டு ('இமாம ...விந்தயே-அபயரூபபலமுண்டாவதற்காக) சிலஸ்தோத்திரங்களை அருளிச்செய்திருப்பதையும் காண்கிறோம். ஆகவே ப்ரக்ருதத்தில் 'திவ்யாம் ஸ்துதிம் நிரமமீத ஸதாம் நியோகாத்' என்று ஸ்தோத்திரத்தை முடிப்பதாலும், 'பச்யந்த்விஹ ப்ரபதநப்ரவணா: மஹாந்த:' என்று ஆரம்பிப்பதாலும் அக்காலத்திய பெரியோர்களின் நியமனத்தை முன்னிட்டு சரணாகதியின் ஸ்வரூபத்தை தீபப்ரகாசனை ஸ்துதிக்கும் வ்யாஜத்தினால் அருளிச்செய்தாரென்று கூறலாம். இதில் மற்றொரு ஆச்சரியம் காணத்தக்கதே. இந்த ஸ்தோத்திரத்திற்கு விஷயமான பகவான் தீபமாக (விளக்காக) ஸேவை ஸாதித்து அஜ்ஞானமாகிற இருளைப் போக்குவதுபோல அவன் விஷயமான ஸ்தோத்திரம் அவனைப்போல 'தீபிகை' (விளக்கு என்று பெயர் பெற்று சரணாகதி விஷயமான அஜ்ஞானத்தைப் போக்குகிறது) என்பதையே பொருள் கொண்டு 'தீபப்ரகாசசரணாகதி தீபிகாக்யாம்' என்று அருளிச்செய்தபடி.

பகவானுக்கு இந்தத் திருநாமம் வந்த வரலாறு:— முன்னொருகாலத்தில் காஞ்சியில் பெரியதொரு வேள்வியை பிரமன் செய்ய நேர்ந்ததாம். அவ்வமயம் லக்ஷ்மி, ஸரஸ்வதி இவ்விருவருக்குள் 'யார் உயர்ந்தவள்?' என்ற விவாதம் கிளம்பிற்று. அப்பொழுது ஸரஸ்வதி தம் கணவனை இவ்விவாதத்திற்கு முடிவு கூறும்படி வினவினாள். பிரமன் லக்ஷ்மியின் மகனாதலால் தம் தாய்க்குத் தாழ்வைக் கூற மனமின்றி லக்ஷ்மியை உயர்ந்தவளென்று கூற உடனே ஸரஸ்வதி கோபித்துக்கொண்டு வேள்விக்கு வர மறுத்தாள். உடனே பிரமன் ஸாவித்திரி முதலிய மற்ற மனைவிகளுடன் யாகம் செய்யத் தொடங்கினான். அதைக்கண்ட ஸரஸ்வதி யாகத்தைக் கெடுக்க பல வழிகளாலும் வைரிகளைக்கொண்டும் இடையூறுகளைச் செய்ய ஆரம்பித்தாள். அப்பொழுது யாகவேதி முழுவதும் இருள் சூழ ஆரம்பித்தது. அதுஸமயம் பிரமனிடம் அன்பு பூண்டவரான பகவான் பிரமன் செய்யும் வேள்வியும் (ஸாதனமும்) தானே அவ்வேள்வியினால் உண்டாகப் போகிற நற்பயனும்தானேயென்று உலகத்தோர் அறியும்பொருட்டு தாம் விளக்காகவும் தம் மனைவியான லக்ஷ்மிதேவியை அவ்விளக்

கின் ஒளியாகவும் செய்துகொண்டு இங்கே (ஸத்யவ்ரதக்ஷேத்ரத்தில்) அவதரித்து பிரமனின் யாகத்தை இடையூறின்றி முடித்து வைத்தார். உடனே யாகத்திற்கு ஏற்பட்ட இடையூறு விலகியது. யாகத்தின் பலனை தேவராஜபகவானை புண்யகோடிவிமானத்துடன் ஸேவை கண்டு க்ருதார்த்தனான்' என்று. இக்காரணத்தினால் இவ்வெம்பெருமானுக்கு 'விளக்கொளி' என்று திருநாமம் வழங்கப்படுகிறது. இந்த காரணம் பற்றியே திருமங்கையாழ்வாரும் இவ்வெம்பெருமானை 'விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில்' என்று செவிக்கினிய செஞ்சொல்லால் மங்களாசாஸனம் செய்துள்ளார். சக்ரவர்த்தித் திருமகனை ஸூர்யனாகவும் ஸீதாபிராட்டியை ஒளியாகவும் கூறுகிற 'அநந்யா ராகவேணாஹம்பாஸ்கரேண ப்ரபா யதா' என்ற வால்மீகி மஹர்ஷிவசனம் ஆழ்வாரின் திருவுள்ளத்தில் இடம் பெற்றதைக் குறிப்பதுபோல இப்பாசுரம் அமைந்தது. இதையே திருவுள்ளத்தில் கொண்டு ஸ்ரீதேசிகனும் இந்த ஸ்தோத்ரத்தில் 'தீபஸ்தம்மவ ஜகதாம் தயிதா ருசிஸ்தே' என்று அருளிச்செய்தார். ஸ்ரீதேசிகன் எம்பெருமானைத் தீபமாகவும், பிராட்டியை அத்தீபத்தின் ஒளியாகவும் அருளிச்செய்திருப்பதால் அவ்விரண்டுபேர்களும் அவினாபூதர்கள் என்கிறவர்த்தத்தை உலகுக்குக் காட்டியருளினார். 'எம்பெருமானைச் சொன்னவிடத்திலே பிராட்டியையும் சொல்லிற்றாம்,' என்கிற ஸம்ப்ரதாயரஹஸ்யத்தை அறிந்த திருமங்கைமன்னனும் அதைத் திருவுள்ளத்தில் கொண்டு இவ்வெம்பெருமானை 'விளக்கொளி' என்று தருவையும், திருமாலையும் சேர்த்து வழங்கும்படியான திருநாமத்தினாலே மங்களாசாஸனம் செய்துள்ளார் போலும். மக்களுக்கு நல்லவழியில நடக்க விளக்கின் ஒளி வேண்டும் அதுபோல இவ்வெம்பெருமானுடையவும் இப்பிராட்டியினுடையவும் திருவருளால் நற்பயனைத்தும் பெறலாம் என்பது ஆழ்வாரின் திருவுள்ளம். இதையே ஸ்ரீதேசிகனும் கலியனாரை குடிகொண்ட கருத்துடையோனாகையாலே 'தீர்க்கம் தம: ப்ரதிநிவர்த்யமிதம் யுவாப்யாம்' என்று அருளிச்செய்தார். இந்த மாதிரி பின்புள்ளாரும் அவரவர்களின் அஜ்ஞானம் நீங்கும்பொருட்டு இவ்வெம்பெருமான் ஸந்நிதியில சரணம் என்று ஒரு தடவை உச்சரித்து நற்பயன் பெறலாம் என்று அரியபெரிய சாஸ்த்ராந்தரங்கத்தையும், கேவலம் உக்திக்கே மோக்ஷஸாதநத்வம் உண்டு என்பதையும் திருவுள்ளத்தில் கொண்டு 'ஸ்தவ்யம் ஸ்தவப்ரியதமம் சரணோக்திவச்யம்' என்று அருளிச்செய்தார். மேலும் கேவலம உக்திக்கே மோக்ஷஸாதநத்வம் உண்டென்பதை இதே ஸ்தோத்ரத்தில் பலகால அருளிச்செய்து இருப்பது 'ரக்ஷபஸ்வபா தவ பரோऽஸ்ம்யஹமித்யபூர்வாந வர்ணாநிமாநஹ்ருதயாநபி வாசயித்ரா' (இங்கு 'அஹ்ருதயாந்' என்பதையும் வாசகர்கள் உற்றுநோக்கவேண்டும்) என்றும், 'ஸித்தாததுக்திரநகா ('ஆஸ்தாம் ப்ரபத்தி' என்கிற ச்லோகம்)' என்றும், 'த்ராணம் பவேதி ஸக்ருதுக்தி ஸமுத்யதானாம்' என்றும் காண்கிறோம். இவ்வெம்பெருமான் விஷயமான 'விளக்கொளியை' என்கிற (திருமங்கை மன்னனின் திருநெடுந்தாண்டகமுளைக்கதிரை) பாசுரம் வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருகவென்றுமடக்கிளியை கை கூப்பி வணங்கினாளே' என்று முடிவு பெற்றிருக்கிறது. இங்கு (திவ்யதேசப் பாடலில்) கிளி என்பது இப் பெருமானை ஆழ்வார் எடுத்த சொல்லையே எடுத்து வடமொழியில் பேசின ஸ்ரீதேசிகனையே குறிக்கிறது. ஸ்ரீதேசிகனும் தன்னை 'ஆசார்யர்கள் கிளியை பழக்குவிக்குமாப்போல' (ரஹஸ்யத்ரயஸாரம் ஆசார்யக்ருத்யதிகாரம்) என்பதனால் கிளியாக அநுஸந்திக்கிறபடி. ஆழ்வார் இதையே திருவுள்ளத்தில் கொண்டு முன்கூட்டியே வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக' என்று அருளிச்செய்திருப்பது ரஸிகர்களுக்கு ஹ்ருதயங்கமம். இதுபோல் காஞ்சியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸந்நிதிகளைக் காட்டிலும் இவ்வெம்பெருமான் ஸந்நிதியில் மற்றொரு விசேஷத்தைக் காண்கிறோம். மற்றவெம்பெருமான்களின் மூலபேரத்திற்கு உபயநாச்சிமார்கள் (மூலவர்கள்) கிடையா. இவ்வெம்பெருமான் மூலபேரத்திற்கு உபயநாச்சிமார்கள் (மூலவர்கள்) உண்டு. இதைத் திருவுள்ளத்திற்கொண்டு ஸ்ரீதேசிகன் சரணாகதிதீபிகையில் 'நித்யம் ச்ரியா வஸுதயா ச நிஷேவ்யமாணம்' என்றே இதை (ஸ்தோத்திரத்தை ஆரம்பித்தபோதிலும் இந்த ஸ்தோத்திரத்தின் முதல் ச்லோகத்தில் சாஸ்த்ரஜ்ஞர்களின் ஸரணியையனுஸரித்து ஸ்ரீதேசிகன் 'பத்மாபதேஸ்துதிபதேந விபத்யமாநம்—— மார்க்யம் யதீச்வரமஹாநஸஸம்ப்ரதாயம்' என்பதினால் விஷயத்தையும் 'ப்ரபதநப்ரவணா:'

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கரின் டில்லிமாநகர் விஜயமும்-ரிஷீகேச ஆந்திராச்ரமத்தில் சிலாசாஸனமும்

நான் பள்ளியில் படிக்கும் மாணவி. நான் சிறு வயதிலிருந்தே சங்கரர், ராமானுஜர், மத்வர் முதலிய மஹான்களுடையவும், துளஸிதாஸர், கபீர்தாஸ், ராமதாஸ், வால்மீகிமுதலிய பக்தர்களுடையவும்சரிதங்களைப்பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். பின்னர் சரித்திரங்களைப் படித்துத் தெரிந்துகொண்டுமிருக்கிறேன். என் தாய் தந்தையர்கள் டெல்லியில் சர்க்கார் உத்யோகத்தில் இருக்கிறபடியால் முக்யமாக உள்ள பல ஸ்தலங்களுக்குச் சென்று தரிசித்து வருவது வழக்கம். அவ்வப்பொழுது சில மஹான்களைத் தரிசனம் பண்ணும் பாக்யமும் எனக்கு ஏற்பட்டது. புது டெல்லியில் தென்னாட்டைச் சேர்ந்த ஓர் பெரிய மடாதிபதி ஒருவர் ஹரித்வார், ரிஷீகேச், பதரி முதலிய இடங்களுக்குயாத்திரைசெய்து விட்டு டெல்லிமாநகரத்திற்கும் விஜயம் செய்யப்போவதாகவும் ஸ்ரீ ஸ்ரீமடாதிபதி ஸ்வாமிகளை வரவேற்று உபசரிப்பதற்காக ஓர் குழு தகுந்தபெரியமனுஷ்யர்களைக்கொண்டு அமைக்க வேண்டிய நோக்கத்துடன் ஓர் கூட்டம் நடைபெற்றது. அந்த மாபெருங்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கென பல ப்ரமுகர்களும் வித்வான், ஸ்ரீ. உப. காளி, ரங்காசார்யஸ்வாமியும் ஸ்ரீஸ்வாமிகளின் ஆஜ்ஞையைப் பெற்று ஸ்ரீமடத்தினின்று வித்வான், மதுராந்தகம், ஸ்ரீ. ரங்கநாதாசார்ய சிரோமணி, ஸ்ரீ. நெடுங்தெரு, ஆர். ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியும் ஸ்ரீமுகபத்திரிகையுடன்டெல்காவந்திருந்தனர். இவை யாவும் ஸ்ரீ. ஆர். சக்ரவர்த்தி ஐயங்கார் பவனத்தில் நடைபெற்றன. ஸ்ரீமடாதிபதி ஸ்வாமிகள் டெல்லிமாநகரம் விஜயம் செய்யும் விஷயத்தைப்பற்றியும், ஆசார்யஸ்வாமிகளின் மஹிமை பற்றியும் நாம் அதற்காகச் செய்ய வேண்டியது என்ன என்பது பற்றியும் விரிவாகப் பேசப்பட்டு ஸ்ரீமுகம் ஸேவிக்கப்பட்டு வேதகோஷங்களுக்கிடையே சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் முடிவுற்றன.

அதுமுதற்கொண்டே டெல்லியிலுள்ள ஆங்கில, ஹிந்தீ பத்திரிகைகளில் ஸ்ரீ அஹோபில மடம் ஜீயர் ஸ்வாமிகளைப்பற்றின யாத்திரைகளைப் படிக்கலானேன். பத்திரிகைகளில் ஜீயர் ஸ்வாமிகள் என்றும், ஸ்ரீ அழகியசிங்கர் என்றும், ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் என்பதாகவும்வெளிவந்திருப்பதைசிலபெரியார் வாயிலாக ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகளுக்கே இவ்வளவு பெயர்கள் இருப்பதாகவும், அந்த அந்த பதத்திற்கு இந்த மாதிரியான அர்த்தம் என்றும் ஸ்ரீந்ருஸிம்ஹமூர்த்தியே ஸ்ரீஸ்வாமிகள், அவர் பேசாத தெய்வம் இவர் பேசும் தெய்வம் என்பதையும் தெரிந்து கொண்டேன்.

டெல்லிமாநகரமெங்கும் ஒரே குதூஹலத்தில்மிதந்தன. யமுனாதீரத்தில் உள்ள ஓர்

என்பதனால் அதிகாரிகளையும், 'பச்யந்து, என்பதனால் தத்வவிஷயஜ்ஞானம்' ப்ரயோஜனம், என்கிற அனுபந்தசதுஷ்டயத்தை அருளிச் செய்தார். இரண்டாவது ச்லோகத்தில் 'இஹ வேகவதீஸமீபே விபாதி' என்பதனால் ஸௌலப்யமும் 'வேதாந்தவேத்யம்' என்பதனால் பரத்வமும் முமுக்ஷுக்களுக்கவச்யம் அறிய வேண்டியதை அருளிச்செய்தார். மூன்றாவது ச்லோகத்தில் இவ்வெம்பெருமானுக்கு 'மரகத ஸ்வாமி' என்று (ஸ்வாபாவிக) திருநாமமிருந்ததாயும் லக்ஷ்மியின்ஸ்வயம்க்ரஹாச்லேஷப்ரயுக்தமாக 'தீபப்ரகாசர்' என்று திருநாமம் வழங்கப்படுவதாக ஸ்தலபுராணக் கதையைத் திருவுள்ளம்பற்றியருளிச்செய்கிறார். இம்மாதிரி இந்தஸ்தோத்திரத்தில்ஒவ்வொருச்லோகத்திலும் அனேக விசேஷங்களைக்காணலாம். இப்படிப்பட்ட மஹோபகாரம் செய்தஸ்வாமி தேசிகன் விஷயத்தில் க்ருதஜ்ஞதையின் பரீவாஹமாக இதை விஜ்ஞாபித்தேன்.

ப்ரம்மாண்டமான கட்டிடம் மின்சாரதீபங்களினாலும், தோரணவிளக்குகளினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. மடாதிபதி ஸ்வாமிகள் ரிஷீகேசத்தினின்றும் தன் சாதுர்மாஸ்யஸங்கல்ப வ்ரதத்தை முடித்துக்கொண்டு குருக்ஷேத்திரம் விஜயம்செய்து டெல்லிமாநகரம் ஸமீபம் எழுந்தருளிய ஸமாசாரம் டெல்லிநகர் பூராவும் பரவலாயின. ஸ்ரீ ஸ்வாமிகளின் சித்திரப்படங்களுடன் நாளை ஜீயர் ஸ்வாமிகள் டெல்லி விஜயம் செய்யும் விஷயங்களைப் படித்து ஆனந்தமடைந்தேன். வாழை மரம் கட்டி, மா இலை தோரணங்கள் அலங்கரிக்கும் யமுனாதீரத்தின்கண் ஜீயர் ஸ்வாமிகள் தங்க ஏற்பாடுகள் செய்திருந்த இடத்தை நானும் என் தாயுமாக இழைகோலங்களை இட்டு மேலும் அழகுபடுத்தினோம். மெழுகுதல், பெருக்குதல், கோலமிடுதல் முதலியன சிறந்த தொண்டல்லவா! ஸாயங்காலம் முதற்கொண்டே யமுனாதீரத்தில் பல மோட்டார்கள் வர ஆரம்பித்தன. நாமம் விபூதி, சந்தனம், குங்குமம் முதலிய சின்னங்களை தங்கள் தங்கள் மதாசாரத்திற்குத் தக்கபடி தங்கள் நெற்றியில் அணிந்துகொண்டு கச்சம் அணிந்து மிகவும் வைதிகச்ரத்தையுடன் பலர் கூடிவிட்டனர். வேதம் கற்ற சாஸ்திரிகளும், வைணவகனபாடிகளும் பூர்ணகும்பம் புஷ்பமாலைகளுடன் காக்ஷியளித்தனர். டெல்லியில் வைதிகப்ராஹ்மணஸபா என்பது ஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளது. டெல்லியில் நடைபெறும் எல்லா வைதிக சடங்குகளும் அந்த ஸ்தாபனத்தார்தான் சாஸ்திரிகளையும், வாத்தியார்களையும் அனுப்பிவைத்து நடத்திவருகிறார்கள். அந்த ஸ்தாபனத் தலைவர் ஸ்ரீமான் எ. ஆர். ஐயர் அவர்கள். அதில் ப்ரதான அங்கம் வகிக்கும் ஸ்ரீ. எஸ். கிருஷ்ணமாசாரியர் இவர்கள் மிகுந்த ச்ரத்தையுடன் அதில் கலந்துகொண்டு வரவேற்பை மிகவும் விசேஷமாக நடத்திவைத்தனர்.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் டெல்லிக்கேட் விஜயம் செய்ய கொஞ்சம் அவகாசமிருந்தபடியால் ஸ்ரீ ஸ்வாமிகள் இப்பொழுது எங்கு வந்துகொண்டிருக்கலாமென்பதை அறிய ஆவல் கொண்டும் தரிசிக்கத் துடித்துக்கொண்டிருக்கும் மனதுடையவர்களும் நான்கு ஐந்து மைல் தூரம் காரில் சென்றனர். அதில் கலந்துகொண்டவர்களில் நானும் ஒருவள். தீவட்டி வெளிச்சம் பளிச்சென்று சற்று தூரத்தில் தென்பட்டது. பகவானின் நாமத்தைச் சொல்லிக்கொண்டு சில ஆட்கள் தங்கமயமான ஓர் பல்லக்கைச் சுமந்து வருவது கண்ணுக்குப் புலனாயிற்று. முன்பு ஓர் குதிரையில் அமர்ந்து ஓர் நீண்ட வெள்ளியினாலான ஓர் குழலை ஒரு மைல் தூரம் சத்தம் கேட்கும்படியான நிலையில் ஊதிக்கொண்டு வந்தான். இருபுறமும் துப்பாக்கி தாங்கிய இரண்டு சிப்பாய்கள் காவல் புரிந்து வந்தனர். இந்தப் பல்லக்கில் என்ன ஸ்வாமிகளா இருக்கிறார்கள் என்று கேட்டேன். இல்லை. அவர் பூஜிக்கும்படியான அஹோபிலம் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹஸ்வாமி என்னும் பதில் கிடைத்தது. சில வார்த்தைகள் பேசிக்கொண்டிருக்கும்பொழுதே மற்றோர் குதிரை வரும் சத்தமும், தீவட்டியின் வெளிச்சமும் ஆட்களின் அரவமும் பாராக்களுடனும் ஓர் பல்லக்கு வந்தது. அதற்குள் ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹஸ்வாமியின் பல்லக்கு வெகு தூரம் சென்றுவிட்டது. இதுதான் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகளின் பல்லக்கு என்பதை அறியலானேன். போலீஸ் பந்தோபஸ்துடன் வரும் பல்லக்கின் ஸமீபம் நெருங்கக்கூட பயமாயிருந்தது. அதற்குச் சற்று தூரத்தில் மணியின் ஓசை கேட்டது. அதைப் பார்த்துவிட்டு யமுனாகாட் செல்லலாம் என்று நினைத்துப் போய் பார்த்தபொழுது அழகிய தந்தங்களுடன் நெற்றியில் பட்டையாகத் தீட்டப்பட்டிருக்கும் திருநாமத்துடன் யானை வந்துகொண்டிருந்தது. அழகிய காளைகள் பூட்டப்படிருந்த வண்டிகள் பல வரிசையாக வந்துகொண்டிருந்தன. அதையும் கண்டு களித்துவிட்டு யமுனாகாட் திரும்பினோம். நாங்கள் சென்று சிறிது நேரம் காத்திருந்தோம். முதற்பல்லக்கு, பூர்ணகும்பங்களுடனும் பத்தியுடனும் ஏராளமான பக்தர்கள் தரிசிப்பதற்குக் காம் குவித்துக் காத்துக்கொண்டிருந்த இடத்தில் வந்து நின்றன. ஜீயர் ஸ்வாமிகள் ஏறிவந்த மேனாவும் குறிப்பிட்ட இடத்தில் வந்து நின்ற

வுடன் யாரோ மடத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஜீயர் ஸ்வாமிகள் உத்திரவு கேட்டு கதவைத் திறந்தார். ஸ்வஸ்திவாசனங்களைக்கூடியிருந்த வைதிகர்கள் சொல்லஆரம்பித்தார்கள். பூர்ணகும்பங்களும், மலர்மாலைகளும் ஸ்ரீ ஆசாரியஸ்வாமிகளுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. காஷாயவஸ்திரம் தரித்து முக்கோல் பிடித்து தன் கருணை பொங்கும் கண்களால் மக்களைக் குளிரக் கடாக்ஷித்து ஆசீர்வதித்த பின்னர் மேனாவில் ஜீயர்ஸ்வாமிகள் தங்கும் இடத்திற்கு வந்து சேர்ந்தனர். மறுதினம் விடியற்காலையில் நடக்கும் விச்வரூபதரிசனத்திற்கே என்னுடன் பள்ளியில் படிக்கும் பஞ்சாபி, குஜராதி முதலிய ஜாதிகளைச் சேர்ந்த பலருடனும் என் தாய்தந்தையருடனும் சென்றிருந்தேன் இதுவரை கண்டிராத நிலையில் அந்த பூஜையை எல்லோரும் ஆச்சரியமாய்ப் பார்த்து அனுபவிக்கலாயினர். யானை, குதிரை, காமதேனுவைப் போன்ற வெண்ணிறப் பசுமாடுகள் பூஜையின்போது வந்திருந்தன. ஸுப்ரபாதம் படிக்கப்பட்ட பின்னர் பாட்டு தெரிந்தவர்கள் ஸ்வாமி விஷயமாக பாடலாம் என்று வெண்பட்டாலான திரையின் உட்பக்கத்திலிருந்து உத்திரவு வந்தது. மனதிற்கு நிம்மதியளிக்கும்படியான குளிர்ந்த வேளை, மனம் மிகவும் குளிர்ந்திருந்தது. பக்தி இல்லாதவர்களுக்கும் பக்தி உண்டுபண்ணும் பரமபாவனமான பாடல்களைப் பாடும் பாக்யம் எனக்கும் கிடைத்தது. உடன் திரைச் சீலை விலக்கப்பட்டது. ஓர் கோயிலை போன்ற வெள்ளி மண்டபம், அதில் பல வைர, மரகத, மாணிக்கம் முதலிய ஆபரணங்களினாலே அலங்கரிக்கப்பட்டு ஜகஜ்ஜோதியாய் நவரத்னகசிதமான ஊஞ்சலில் ஆதியுஞ்ஜோதியுருவாகிய ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமியை தரிசித்து உடல் புளகாங்கிதமடைந்தது. தபோமூர்த்தியான ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் பொன் தட்டில் கற்பூரஜோதி ஜ்வலிக்க ஹாரத்தி செய்துகொண்டு நிற்கும் காட்சி கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் தானாகவே வெளிவரலாயின. யானையின் சிலம்புதலும், குதிரையின் கனைத்தலும், பக்ஷிகளின் நாதமும்கேட்டு மிருகங்களும் பகவானைத் தொழுகின்றதே, நம் ஜன்மம் எதற்கு என்று தோன்றிற்று. யமுனாதீரத்தில் டோலை உத்ஸவம் கண்ணனுக்கு நடக்கிறது என்று சொன்னார்கள். காலை முதல் ஸாயங்காலம் வரை ஐந்து காலங்கள் ஸ்வாமி பூஜை நடப்பதை எல்லோரும் தரிசித்தனர். ஸ்வாமி ப்ரஸாதம் எல்லாருக்கும் விசேஷமாகக் கிடைத்து வந்தது. ஓர் அழகான மண்டபத்தினுல் தங்கத்தினாலான டோலையில் ஸர்வாபரணங்களினாலும் அத்யத்புதமாக அலங்காரம் செய்யப்பட்டு வேணுகனலோலனான ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா எல்லோருக்கும் காக்ஷி தந்தார். வித்வான்களின் சொற்பொழிவுகளும் ஜீயர்ஸ்வாமிகளின் உபதேசமும் டோலையில் கண்ணன்முன் அமர்ந்து பலர் பாடவும் இப்படி ஆனந்தமாக மஹோத்ஸவத்தைக் கண்டுகளித்தோம். அதில் அடியாளும் ஒருத்தி.

டெல்லிமாநகரில் (20 அக்பர் ரோடில்) ஸ்ரீ. M. அனந்தசயனம் ஐயங்கார் பவனத்தில் எழுந்தருளியிருந்த ஸமயம் விசேஷ உத்ஸவங்கள் முதலியன நடைபெற்றுவந்தன. சில நாட்கள் தங்கிய பின்னர் ஸ்ரீஜீயர் ஸ்வாமிகள் நைமிசாரண்யம், அயோத்யை முதலிய இடங்களுக்கு யாத்திரை தொடங்கி விட்டார். தினம் ஸ்வாமி தரிசனமும் வேதபாராயணங்களும் உபதேசங்களும் கேட்டு களித்த எங்களுக்கு ஜீயர் ஸ்வாமிகள் டெல்லியை விட்டுப் புறப்பட்ட பின்னர் மனம் சாந்தியடைய எங்காவது ஓரிடம் சென்றுவரவேண்டுமென்று தோன்றியபடியால் என் தாய் தந்தையருடன் ரிஷீகேசம் சென்று ஸ்ரீஜீயர் ஸ்வாமிகள் சென்றிருந்த ஆந்திராச்ரமத்தில் தங்கினோம். துலாமாதம் ஆரம்ப ஸ்நாநம் பண்ணிவிட்டு டெல்லி செல்லலாமென்றிருந்தோம். அதற்கு முதல் நாள் ஆந்திராச்ரமத் தலைவர் ஸ்ரீ சச்சிதாநந்த ஸரஸ்வதி என்பவர் மிகவும் உத்ஸாஹத்துடன் சில காரியங்கள் செய்துவந்தார். என்ன விசேஷம் என்று கேட்டதற்கு நாளை நமது ஆச்ரமத்தின் ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்வாமிகள் இரண்டு மாதகாலம் ஆச்ரமத்தில் எங்கள் ப்ரார்த்தனைக்குச் சேர தங்கியிருந்து

(தொடர்ச்சி 278-ம் பக்கம்)

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

புரட்டாசி மீ 27 வ ராத்திரி டில்லியிலிருந்து புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள காஜியாபாத்திற்கு எழுந்தருளியாயிற்று. 28வ அவ்விடத்திற்கு டில்லியிலிருந்து ஸ்ரீ சக்ரவர்த்தி ஐயங்கார், முதலியோர் வந்து பெருமாளை ஸேவித்துவிட்டுப் போனார்கள். அன்று ராத்ரி புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள தூம் என்ற ஊருக்கு எழுந்தருளினார். அன்று ராத்திரி புறப்பட்டு 11 மைல் தூரமுள்ள ஸிகிந்திராபாத் எழுந்தருளினார். அன்றுராத்திரி புறப்பட்டு 9 மைல் தூரமுள்ள வல்லிபுரு எழுந்தருளினார். ஐப்பசி மீ 1 வ புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள கூர்ஜா எழுந்தருளினார். அன்று ராத்திரி புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள அரணியா எழுந்தருளினார். அவ்விடத்திலிருந்து தமிழ் போகிகளில் 13 பேர்கள் தங்களால் முடியவில்லை என்று ஒரே பிடிவாதமாக ஊருக்குப் போய்விட்டார்கள். அன்று ராத்திரி இருந்த ஆட்களை வைத்துக் கொண்டு 6 மைல் தூரமுள்ள கபானு எழுந்தருளினார். 4வ துவாதசி ஆராதனம் அங்கு நடந்தது. டில்லியிலிருந்து வித்வான், ஸ்ரீ. காளி ரங்காசாரியர், ஸ்ரீ. கே எஸ். கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. என். கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. சக்ரவர்த்தி ஐயங்கார், ஸ்ரீ. பத்மனப ஐயங்கார் முதலானவர்கள் அங்கு வந்து பெருமாளை ஸேவித்தார்கள். வேறு போகிகள் வரும்வரையில் கொஞ்சம் கொஞ்சம் தூரமாவது மத்தியான்னத்துக்குமேல் ஸஞ்சாரம் நடக்கலாம் என்று திருவுள்ளம் பற்றி ஐப்பசிமீ 5வ மத்தியான்னம் அவ்வூரை விட்டுப் புறப்பட்டு 5 மைல் தூரமுள்ள பர்த்திரி எழுந்தருளினார். அன்று ராத்திரி (விடியற்காலை) தீபாவளியைஉத்தேசித்து பெரியபெருமாளுக்கும் கண்ணனுக்கும் விசேஷ திருமஞ்ஜனம் நடந்தது. 6வ மத்தியானம் புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள அலிகார் எழுந்தருளினார். ஐப்பசி 7ந்தேதி மத்தியானம் புறப்பட்டு 13 மைல் தூரமுள்ள நானு எழுந்தருளினார். அவ்விடம் டில்லியிருந்து ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ சக்ரவர்த்தி ஐயங்கார், ஸ்ரீராமபத்ர ஐயங்கார் முதலியவர்கள் வந்து பெருமாளை ஸேவித்தார்கள். ஐப்பசி 8ந்தேதி மத்தியானம் புறப்பட்டு 8மைல் தூரமுள்ள கோபி எழுந்தருளினார். அவ்விடம் பர்லி ஸ்ரீ ராகவாசாரியர் வந்து பர்லிக்கு எழுந்தருளத் திருவுள்ளம் பத்தினது தன்னுடைய விசேஷபாக்யம் என்றும் கங்கைக்கு நல்ல பாலம் ஏற்பட்டுவிட்டது என்றும், பெருமாள் எழுந்தருளுவதற்குள் ராமகங்கைக்கும் பாலவேலை முடிந்துவிடும் என்றும், அவசியம் தங்களூருக்கு எழுந்தருளவேண்டும் என்றும், மூன்று நாளாவது எழுந்தருளியிருக்கவேண்டுமென்றும் பிரார்த்தித்துவிட்டுப் போனார்.

அவ்விடம் எழுந்தருளியிருக்கும்போது அந்த வழியாக ஒரு பெரிய யானை போனதை கூப்பிட்டு பெருமாளுக்காக அதைக் கொடுப்பாரா என்று விசாரித்ததில் விலை முதலியவைகளைத் தன் முதலாளியிடம் கேட்டுக் கொண்டுவந்து சொல்வதாகச் சொன்னான். அந்த யானை முன்னிருந்த பெரிய யானைக்கு அனேகமாக ஸமானமாக இருப்பதால் அதை அவசியம் வாங்கவேணும் என்று எல்லோரும் விஜ்ஞாபித்தார்கள். பெருமாள் திருவுள்ளம் இருந்தால் வரும் என்று ஸாதிக்கும்படியிருந்தது. 9ந்தேதி மத்தியானம் புறப்பட்டு 5 மைல் தூரமுள்ள ஸிகந்தராவ் எழுந்தருளினார். 10ந்தேதி மத்தியானம் புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள அக்சோலி எழுந்தருளினார். 11ந்தேதி ஞாயிற்றுக்கிழமை 41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் வருஷாராதனத்தை உத்தேசித்து நடந்துவந்த ஸேவை சாற்றுமுறை முடிந்து ஸம்பாவனை ஸ்ரீபாததீர்த்தம்கோஷ்டி நடந்தது. மத்தியானமும் யதாக்ரமம் திருவாராதனமும் நடந்து ததீயாராதனமும் நடந்தது. டில்லியிலிருந்து ஸ்ரீ எஸ். கிருஷ்ண

ஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ கோதண்டராம ஐயங்கார் முதலானவர்கள் வந்து இருந்தார்கள். போகியின் ப்ரார்த்தனையின் பேரில் மறுநாளும் அவ்விடமே எழுந்தருளியிருந்தார். அங்கு எழுந்தருளியிருக்கும் போது வழியில் ஒட்டகமும், வண்டியும் போய்க்கொண்டிருந்ததை விசாரித்து பெருமாளுக்கு வண்டியுடன் ஒட்டகத்தை வாங்கலாம் என்று எல்லாரும் விஜ்ஞாபித்ததின் பேரில் அந்த ஒட்டகமும் வண்டியும் வாங்கப்பட்டது. மாட்டு வண்டியைவிட அது வேகமாக வரக்கூடியதாகவும் அதிக சாமான்களும் வைக்கக் கூடியதாயும் இருந்தபடியால் ஆராதனத்திற்கு வேண்டிய சாமான்களை வைத்துக்கொண்டு வரலாம் என்றும் விஜ்ஞாபித்தார்கள். 12ந்தேதி மத்தியான்னம் அதை விட்டுப் புறப்பட்டு 12மைல் தூரமுள்ள காஸ்கஞ்சி எழுந்தருளினர். 13ந்தேதி மத்தியான்னம் புறப்பட்டு 8 மைல் தூரமுள்ள ஸோரோம் எழுந்தருளினர். காஸ்கஞ்சியில் எழுந்தருளியிருக்கும்போது கோபியில்பார்த்த யானையை விலை தீர்த்து பெருமாள் ஸஞ்சாரம் புறப்படும் ஸமயத்தில் ஓட்டிக்கொண்டு வந்தார்கள். எல்லாருடைய பிரார்த்தனையின் பேரில் அதையும் வாங்கியாயிற்று. காஸ்காஞ்சியிலிருந்து அதுவும் ஸோரோமுக்கு வந்து சேர்ந்தது. 14ந்தேதி புதன்கிழமை மத்தியான்னம் புறப்பட்டு 9 மைல்தூரமுள்ளதாயும் கங்கைக்கு அக்கரையில் கங்கை ஓரமாயுமுள்ள கச்சலா எழுந்தருளினர். அன்று இரண்டு வேளையும் கங்கையில் நீராட்டம் ஆயிற்று. 15ந்தேதி மத்தியானம் புறப்பட்டு 10 மைல் தூரமுள்ள உஜ்ஜானி எழுந்தருளினர். கச்சாலாவில் புது யானையை இரண்டு நாட்கள் இருந்து பழக்கிக்கொண்டு வருவதாக விஜ்ஞாபித்தார்கள். 16ந்தேதி வெள்ளிக்கிழமை மத்தியானம் புறப்பட்டு 8மைல் தூரமுள்ள பதாயூம் எழுந்தருளியாயிற்று.

(தொடரும்)

276ம் பக்கத்தின் தொடர்ச்சி

நடத்தி எங்களையும் அனுக்ரஹம் செய்தருளினர். அதை என்றென்றும் மறவாவண்ணம் ஓர் ஶாஸனம் செய்து கொண்டாட எண்ணி இருந்தோம். அதற்காக டெல்லியிலிருந்தும், மடத்திலிருந்தும் பல பெரியார்கள் வருகிறார்கள். நாளை அம்மஹோத்ஸவம் நடைபெறப் போகிறது. அதற்கான ஏற்பாடுகள் நாங்கள் செய்துவருகிறோம் என்று கூறினர். குறிப்பிட்ட ஸமயத்திற்கு பல ஸாதுக்களும் நகர மக்களும் கூடிவிட்டனர். வெண்ணிற ஸலவைக் கல்லில் ஜீயர் ஸ்வாமிகள் ஆந்திராச்ரமத்தில் தமது பதரி யாத்திரையை முடித்துக் கொண்டு இரண்டு மாதகாலம் தங்கியிருந்ததாக வரையப்பட்டிருந்த சிலா ஶாஸனத்தை பருத்திச்சேரி, ஸ்ரீ எஸ். க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி ஆந்திராச்ரமத்தலைவரின் ப்ரார்த்தனையின் பேரில் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமி எழுந்தருளியிருந்த மண்டபத்தின் நடுவே ஸ்தாபனம் செய்தார். மதுராந்தகம் வித்வான் ஸ்ரீ. ரங்கநாதாசார்யஸ்வாமி அங்குகூடியிருந்த ஸாதுக்கள் கூட்டத்தில் ஹிந்தியில் ஸ்ரீமடத்தினுடையவும் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்வாமியினுடையவும் ஸ்ரீ அழகியசிங்கருடையவும் வைபவங்களையும் பெருமைகளையும் எடுத்துச் சொல்லி விசேஷ உபந்யாஸம் செய்தார். வடக்கத்தி வேதபாடிகள் வேதம் ஓத சந்தனதாம்பூலங்கள் வழங்க விழா இனிது முடிவுற்றது.

ஸ்ரீ:

ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ர மஹாதேசிகன்

(37-வது பட்டம்) அருளிச்செய்த

ஸ்ரீமச் சாரீரக ஸுப்ரபாதம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

இந்த அதிகரணத்தின் பூர்வபக்ஷஸங்க்ரஹம்:— 'ஜ்யோதி:' என்று சொல்லப்பட்டது ப்ரஸித்தமான ஸூர்யன் முதலான ஜ்யோதிஸ்ஸு தான். விஷயவாக்யத்துக்கு— ஸமஸ்தபூமிப்ரதேசத்திலிருந்தும் ஸர்வாந்தரிக்ஷலோகத்திலிருந்தும் மேலிருக்கும் அத்யுத்தமமான த்யுலோகத்தில் இருக்கும் ஜ்யோதிஸ்ஸு என்று பொருள். இந்த ஜ்யோதிஸ்ஸும் புருஷனிடமிருக்கும் ஜாடராக்நியும் ஒன்று என்று மேல் சொல்லியிருக்கிறது. இந்த ஐக்யோபதேசம் இரண்டும் ஒரே ஜாதியாய் (அதாவது ப்ராக்ருதமாய்) இருந்தால் தான் பொருந்தும். பின்னும், முன் இரண்டு அதிகரணங்களில் ஜகத்காரணத்வம் என்ற லிங்கம் ஆகாசம், ப்ராணன் என்ற விசேஷசப்தங்களைப் பாதித்தது. இங்கு அப்படிப்பட்ட லிங்கம் ஒன்றுமில்லை. ரூடியால் சொல்லப்பட்ட பொருளுக்கு அநுகூலமான லிங்கமுமிருக்கிறது. ஆக, ரூடிச்ருதி, ஜாடராக்நியுடன் ஐக்யம் சொன்னது என்ற லிங்கம், என்ற இரு காரணங்களால் ஜ்யோதி சப்தத்தால் சொல்லப்பட்டது ப்ரஸித்தமான ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸே என்று பூர்வபக்ஷம்.

கேள்வி— ஜகத்காரணத்தைச் சொல்லும் வாக்யங்கள் இந்த அத்யாயத்தில் விசாரிக்கப்படுகின்றன. இந்த ஜ்யோதிர்விஷயமான வாக்யத்தில் ஆகாசப்ராணாதிவாக்யங்களில் போலே ஜகத்காரணம் என்று சொல்லப்படவில்லையே? ஆக இவ் வாக்யத்தை இங்கே விசாரிப்பது எப்படி?

விடை— முண்டகத்தில் கூறிய அக்ஷரவித்யையில், அக்ஷரத்தை ஜகத்காரணமாகவும் அளவில்லாத தன்னைவிட மேலானதில்லாத ஜ்யோதிஸ்ஸையுடையதாகவும் ஓதப்பட்டிருக்கிறது. 'न तत्र सूर्यो भाति … … … … … … तस्य भासा सर्वमिदं विभाति' என்று நிரதிசய தீப்தியோகமும், 'तथाऽक्षरात् संभवतीह विश्वम्' என்று ஜகத்காரணத்வமும் கூறப்பட்டிருக்கின்றன. ஆக, நிரதிசயதீப்தியுடன் கூடின வஸ்துவுக்கு ஜகத்காரணத்வம் சொல்லியிருப்பதால், இங்கு ஜ்யோதிர்வாக்யத்திலும் நிரதிசயதீப்தியோகம் சொல்லியிருப்பதால், இந்த ஜ்யோதிஸ்ஸே ஜகத்காரணம் ஆகலாம் என்று பூர்வபக்ஷியின் அபிப்ராயம். இந்த அபிப்ராயம் ஸித்தாந்தத்திலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஸித்தாந்தஸங்க்ரஹம்— ஜ்யோதிஸ்சப்தத்தால் சொல்லப்பட்டவன் பரமபுருஷனே, ப்ரஸித்தமான ஆதித்யாதிதேஜஸ்ஸு அன்று. விஷயவாக்யத்தில் 'யத்' என்கிற பதம் வேறிடத்தில் ப்ரஸித்தமானதை இந்த வாக்யம் சொல்லுகிறதென்பதைக் காட்டுகிறது.

(அநுவாதம்) ஆதலால் 'ஜ்யோதி:' என்ற பதம் ரூடிச்ருதியானாலும் துர்பலம். பூர்வபக்ஷி சொன்ன லிங்கமுமில்லை. ஜாடராக்நியையும் ஜ்யோதிஸ்ஸையும் ஒன்றாகச் சொன்னது, ஜ்யோதிஸ் சப்தத்தால் சொல்லப்பட்ட பரமாத்மாவை ஜாடராக்நிக்கு ஆத்மாவாகத் தியானம் பண்ணவேண்டுமென்பதற்காக. இப்படி த்யானம் செய்வதற்குப் பயனும் மேல் வாக்யத்தில் சொல்லப்படுகிறது- 'चक्षुष्यः श्रुतो भवति' என்று. உடலிலுள்ள ஜாடராக்நிக்கு அந்தர்யாமியான பரமாத்மாவைப் பார்த்ததாகவும் கேட்டதாகவுமுபாஸிப்பவன் அழகுள்ளவனாகவும் கீர்த்தியுள்ளவனாகவுமிருப்பான் என்று பலம் சொல்லியிருக்கிறது. உடலைத் தொட்டால் உஷ்ணம் தெரிகிறதே, அதுதான் அவனைப் பார்ப்பது. காதுகளைக் கைகளால் மூடிக்கொண்டால் உள்ளில் ஒரு சப்தம் கேட்கப்படுகின்றதே, அது அவனைக் கேட்டதாகும். 'अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमास्थितः' என்று ஸ்ரீ கீதையில் பகவானும் அருளிச்செய்திருக்கிறார். பூர்வபக்ஷி சொன்னபடி விஷயவாக்யங்களுக்குப் பொருள் இல்லை. 'विश्वतः' என்பது வ்யஷ்டிஸ்ருஷ்டியி லுண்டுபண்ணப்பட்டவைகளைச் சொல்லும், 'तथाक्षरात् संभवतीह विश्वम्' என்ற முண்டகச்ருதியில் விச்வசப்தத்தை வ்யஷ்டிபதார்த்தங்களில் ப்ரயோகித்திருக்கிறது. 'ஸர்வத:' என்பது ஸமஷ்டிஸ்ருஷ்டியி லுண்டுபண்ணப்பட்டவைகளைச் சொல்லும். இந்த இரண்டு பதங்களாலும் ஜ்யோதிஸ் இருக்குமிடம் ப்ரக்ருதிமண்டலத்துக்கு மேல் என்று ஏற்பட்டது. அந்த அப்ராக்ருதமான ஸ்தானத்திலிருக்கும் ஜ்யோதிஸ் ப்ரக்ருதியின் கார்யமாயிருக்காது. ஜாடராக்நியோ ப்ரக்ருதியின் கார்யம். ஆதலால் இவ்விரண்டும் ஒரே ஜாதியல்ல. இப்படி பூர்வபக்ஷி சொன்ன காரணங்களும் ஸமஞ்ஜஸங்கள் அல்ல என்று சொல்லப்பட்டது. ஸித்தாந்தத்துக்கு அநுகூலமான லிங்கமும் ப்ரகரணம் என்ற ப்ரமாணமுமிருக்கின்றன என்று காட்டுவோம். விஷயவாக்யத்திலுள்ள 'திவ: என்ற பதம் 'पादोऽस्य सर्वा भूतानि, त्रिपादस्यामृतं दिवि' என்றதிலிருக்கும் 'दिवि' என்பதை நினைவுக்குக் கொண்டு வந்து, இரண்டிடத்திலும் சொல்லப்பட்டது ஒன்று என்று தெரிவித்து இரு வாக்யங்களையும் ஒரு ப்ரகரணமாகச் செய்கிறது. 'பாதோஸ்ய' என்ற வாக்யம் புருஷஸூக்தத்திலிருந்து இங்கே உதாஹரணமாகச் சொல்லப்பட்டது. புருஷஸூக்தத்தில் சொல்லப்பட்டவன் பரமாத்மா. ஆதலால் 'திவ:' என்னும் பதம் பரமாத்மாவின் ப்ரத்யபிஜ்ஞையை யுண்டுபண்ணி விசாரவிஷயமான ஜ்யோதிஸ் பரமாத்மா என்று தெரிவிக்கிறது. இது லிங்கம்; இரண்டு வாக்யமும் ஒன்றாயிருப்பது ப்ரகரணம். இந்த அர்த்தம் தான் இந்த அதிகரணத்தின் முதல் ஸூத்ரத்தில் சொல்லியிருக்கிறது.

இதற்குமேல் பூர்வபக்ஷி கேட்கிறான்:- முன் வாக்யம் காயத்ரீ என்ற சந்தஸ்ஸைப் பற்றியன்றோ கூறுகிறது; பரமாத்மாவின் நினைவு எப்படி வரும்? என்று. ஸமாதானம்— காயத்ரீ என்ற பதமும் பரமாத்மாவையே சொல்லுகிறது. காயத்ரிக்கும் நான்கு பாதங்கள். பரமாத்மாவுக்கும் நான்கு பாதங்கள். இந்த ஒற்றுமையைக் கொண்டு பரமாத்மாவை காயத்ரியாக உபாஸிக்கவேண்டுமென்கிறது. பக்த ஜீவர்கள், ப்ருதிவீ, சரீரம், ஹ்ருதயம் என்ற நான்கு பாதங்கள் பரமாத்மாவுக்கு என்று உபநிஷத்து காட்டுகிறது. காயத்ரீ சந்தஸ்ஸுக்கு இவை பொருந்தா. நான்கு பாதமுள்ள காயத்ரீ ஸ்ரீபாஷ்யத்தில் உதாஹரித்திருக்கிறது. இந்த விஷயம் இவ்வதிகரணத்தின் 2, 3, ஸூத்ரங்களில் கூறப்பட்டது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ஆளவந்தார் 2.

ஸ்ரீசதுச்லோகீ:—

சாரீரகசாஸ்த்ரம் ஸ்ரிய:பதியான நாராயணனே பரதத்வம் என்பதை நிரூபிக்கிறது. லக்ஷ்மியும் பகவானுக்கு ஸமமானவள் என்பது ஸ்ரீசதுச்லோகீ என்கிற இந்த ஸ்தோத்ரத்தில் நிரூபிக்கப்படுகிறது.

காந்தஸ்தே புருஷோத்தம: பணிபதிஶ்ஶய்யாஸநம் வாஹநம் வேதாத்மா விஹகேச்வரோ யவநிகா மாயா ஜகந்மோஹிநீ। ப்ரம்மேசாதி ஸுரவ்ரஜஸ் ஸதயிதஸ் த்வத்தாஸ தாஸீ கண: ஸ்ரீரித்யேவ ச நாம தே பகவதி ப்ரூம: கதம் த்வாம் வயம் ॥

कान्तस्ते पुरुषोत्तमः फणिपतिः शय्यासनं वाहनं
वेदात्मा विहगेश्वरो यवनिका माया जगन्मोहिनी।
ब्रह्मेशादिसुरव्रजः सदयितस्त्वद्दासदासीगणः
श्रीरित्येव च नाम ते भगवति ब्रूमः कथं त्वां वयम्॥

புருஷோத்தம:- (புருஷோத்தமன் என்று அஸாதாரணமான பெயரை உடைய) புருஷர்களுக்குள் ச்ரேஷ்டனாகிய எம்பெருமான், தே- உனக்கு, காந்த:- ப்ரியமான பர்த்தா. பணிபதி:- ஆதிசேஷன், சய்யா- படுக்கை(யும்) ஆஸநம்- ஆஸநமும், வேதாத்மா- வேதங்களின் ஸ்வரூபமாகிய, விஹகேச்வர:- (பக்ஷிராஜனாகிய) கருடன், வாஹநம்- வாஹநம், ஜகந்மோஹிநீ- லோகத்தை மயக்குகிற, மாயா- ப்ரக்ருதி, யவநிகா- திரை. ஸதயித:- தங்கள் பத்னிகளுடன் கூடிய, ப்ரம்மேசாதிஸுரவ்ரஜ:- ப்ரஹ்மா, ஈச்வரன், முதலியதேவதைகளின் ஸமூஹம், த்வத்தாஸதாஸீகண:- உன்னுடைய (வேலைக்கார, வேலைக்காரிகளின்) தாஸவர்க்கங்களின் கூட்டம், தே- உனக்கு, நாம ச- பெயரும், ஸ்ரீ: இத்யேவ ச- ஸ்ரீ என்பதே. பகவதி! இப்படி ஸகல கல்யாணகுணங்களும் நிறைந்த லக்ஷ்மியே, த்வாம்- உன்னை, வயம்- நாங்கள், கதம்- எப்படி, ப்ரூம:- சொல்லுவோம். (வர்ணிப்போம்)

சாரீரக சாஸ்த்ரத்தில் முதல்அத்யாயத்தில் எல்லா வஸ்துக்களும் பகவானுடைய சேஷபூதம் என்று அதாவது அவனுடைய ப்ரயோஜனத்திற்காகவே (லீலாவிபூதியின்) ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலியவைகள் செய்யப்படுகின்றன என்பவை விஸ்தரிக்கப்படுகின்றன. நான்காவது அத்யாயத்தில் பரிபூர்ணமான பரமாத்மாவை (மோக்ஷத்தில்) ஸ்ரீவைகுண்டத்தில் (நித்யவிபூதியில்) அனுபவிப்பதே பலம் என்று கூறப்படுகிறது.

இங்கு 'காந்தஸ்தே புருஷோத்தம:' என்ற ச்லோகத்தில் லீலாவிபூதியென்றதும், நித்யவிபூதியென்றதுமான இரண்டு விபூதிகளும் லக்ஷ்மிக்கு விபூதிகள் என்று கூறப்படுகிறது.

பகவானை ஸ்தோத்ரம் செய்யும் முன்பு பிராட்டியை ஸ்தோத்ரம் செய்வதற்குக் காரணம் நம்முடைய அபராதங்களையெல்லாம் மறக்கும்படி செய்து நம்மை பகவான் அங்கீகரிக்கும்படி செய்வதற்காகவே என்பது. ஸ்ரீகுணரத்னகோசத்தில்:— '**किमेतत् निर्दोषः क इह जगतीति त्वमुचितैः उपायैर्विस्मार्य स्वजनयसि माता तदसि नः**' இந்த ஜகத்தில் தோஷமில்லாதவன் யார் என்று நீ (பிராட்டியே!) யுக்தமான உபாயங்களினால் (எங்கள் தோஷங்களை) மறக்கும்படி செய்து உன்னைச் சேர்ந்தவர்களாக்கிக் கொள்ளுகிறாய். ஆதலால் எங்களுக்கு மாதா ஆகிறாய்' என்ற பட்டர் வாக்யமும் '**न कश्चिन्नापराध्यति**' தோஷம் செய்யாதவன் இல்லை என்ற ஸீதாபிராட்டியின் வாக்யங்களும் இங்கு ஜ்ஞாபகத்திற்கு வரத் தகுந்தவை.

காந்த:தே என்பதினால் ப்ரியனாகவும் அநுரூபனாகவும் இருக்கும் புருஷோத்தமன் என்பதைக் குறிப்பிடுகிறார். இதையேதான் வால்மீகிபகவான் '**तुल्यशीलवयोवृत्तां**' என்று ஸீதாப்பிராட்டியை ராமபிரானுக்கு ஒப்பிடுகிறார். **देवदेवदिव्यमहिषीं** என்று கத்யத்தில் பாஷ்யகாரர் குறிப்பிட்டருளுகிறார். 'பணிபதிச்சய்யா' முதலியவைகளினால் நித்யஸூரிகளும் இவ

ளுக்கு தாஸர்கள் என்பதை ஸூசிப்பிக்கிறார். வேதங்களுக்கு அதிஷ்டாதாவாக கருடன் ச்ருதியில் கூறப்பட்டுள்ளார். அப்படிப்பட்ட கருடனும், விருத்த ஜாதியிலுள்ள ஆதிசேஷனும் விரோதமில்லாமல் எக்காலமும் ஸேவிக்கப்படுகிறாள் பிராட்டி என்றும் மற்றைய நித்யஸூரிகளும், முக்தர்களும் லக்ஷ்மிக்கு பரிஜனங்களாக இருக்கிறார்கள் என்பதும் அறியப்படுகிறது. ஸ்ரீவைகுண்டகத்யத்திலும் 'शेषशेषाशनादि सर्व परिजनं' என்றுகூறப்பட்டுள்ளது. இதேபோல் லீலாவிபூதியில் உள்ள அசேதனம்முழுமையும் இவளுக்குசேஷபூதம் என்பதை 'यवनिका माया जगन्मोहिनी' என்று குறிப்பிடுகிறார். இதுதான் 'भगवत्स्वरूपतिरोधानकरीं' என்று கத்யத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாயையைத்தான் (ஸத்வ ரஜஸ் தமஸ் ரூபமான) ப்ரக்ருதி என்று ச்வேதாச்வதரோபநிஷத் கூறுகிறது. திவ்யதம்பதிகளை ஆச்ரயிக்காதவர்களுக்கு திவ்யதம்பதிகள் ப்ரக்ருதிமாயையினால் மறைக்கப்பட்டவர்களாகிறார்கள் என்று கூறப்படுகிறது.

கர்மங்களுக்கு வசப்பட்ட எல்லோருக்கும் லக்ஷ்மீஶேஷி என்பதை குறிப்பிடத்தான் 'ब्रह्मेशादि' என்று குறிப்பிடுகிறார். உயர்ந்தவர்களைக் குறிப்பிடுவதினால் மற்றெல்லாரையும் குறிப்பிட்டதாக ஆகுமல்லவா.

மேலே குறிப்பிட்டுள்ள குணங்கள் எல்லாம் ச்ருதி, ஸ்ம்ருதி இவைகளினால் கூறப்பட்டிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், அஸாதாரணமாகிய திருநாமமே போதும் என்ற கருத்தில் 'श्रीरित्येव च नाम ते' என்று கூறுகிறார். நிருக்தி வசனங்களில் ஸ்ரீ என்ற பதத்துக்கு தானடைந்திருக்கிற, இதரரால் அடையப்படுகிற, கேட்டுக்கொண்டிருக்கிற பாபங்களைப் போக்குகிற என்றெல்லாம் கருத்துக்கள் கூறப்படுகின்றன. இவைகளினால் லக்ஷ்மியே எல்லா தோஷங்களையும் போக்குகிறாள் என்றெல்லாம் ஏற்படுகிறது. இம்மாதிரியான காரணங்களையெல்லாம் கொண்டுதான் பகவானும் ஸ்ரீநிவாஸன், ஸ்ரீதரன் என்றெல்லாம் கூறப்படுகிறான். தோஷமே இல்லாமல் மங்களகரமாகவே ஸர்வமும் அமைந்திருக்கிறதென்பதை விளக்கவே एव என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட உயர்ந்த குணங்களோடு கூடிய லக்ஷ்மியை தகுந்த வார்த்தைகளைக்கொண்டு ஸ்தோத்ரம் செய்ய நாம் அசக்தர்கள் என்ற எண்ணத்துடன் 'स्तुमः कथं त्वां वयम्' என்று குறிப்பிடுகிறார். वयम् என்பது அல்பஜ்ஞானத்துடன் கூடியவர்கள் நாம் என்பதையும் குறிப்பிடுகிறது.

2. லக்ஷ்மியானவள் எல்லையில்லாத, தடுக்கப்படாத மஹிமையுடன் கூடியவள் என்பதை இரண்டாவது ச்லோகத்தின் மூலம் தெளிவுபடுத்துகிறார்.

யஸ்யாஸ்தே மஹிமாநமாத்மந இவ த்வத்வல்லபோபி ப்ரபு: நாலம் மாதுமியத்தயா நிரவதிம் நித்யாநுகூலம் ஸ்வத:। தாம் த்வாம் தாஸ இதி ப்ரபந்ந இதி ச ஸ்தோஷ்யாம்யஹம் நிர்பயோ லோகைகேச்வரி! லோகநாததயிதே! தாந்தே தயாம் தே விதந்॥

यस्यास्ते महिमानमात्मन इव त्वद्वल्लभोऽपि प्रभुः
नालं मातुमियत्तया निरवधिं नित्यानुकूलं स्वतः।
तां त्वां दास इति प्रपन्न इति च स्तोष्याम्यहं निर्भयो
लोकैकेश्वरि! लोकनाथदयिते! दान्ते दयां ते विदन्॥

யஸ்யா:- எந்த, தே- உன்னுடைய, நிரவதிம்- எல்லையில்லாததும், ஸ்வத:- இயற்கையாகவே, நித்யாநுகூலம்- எப்பொழுதும் அநுகூலஸ்வபாவத்தோடு கூடியிருக்கிற, மஹிமாநம்- மஹிமையை, ஆத்மந இவ- தன்னுடைய (மஹிமையைப் போலவே) இயத்தயா- இவ்வளவு என்று, மாதும்- அளவிட, ப்ரபு:- ஸர்வசக்தனாகிற, த்வத்வல்லபோபி- உன் ப்ரியனாகிய பகவான் கூட, நாலம்- சக்தி உள்ளவன் அல்ல. லோகைகேச்வரி- உலகங்களுக்கெல்லாம் ஒரே நாயகியாகிற, லோகநாததயிதே- உலகங்களுக்கு நாதனாகிய பகவானுக்கு பார்யையாகிய லக்ஷ்மியே! தாந்தே- அச்ரயித்தவர்களிடத்தில், தே-உன்னுடைய, தயாம்-தயையை விதந்- தெரிந்துகொண்டிருக்கிற, அஹம்- நான், தாம்- அப்பேர்ப்பட்ட, த்வாம்-உன்னை,

தாஸ இதி– தாஸன் என்பதினாலும், ப்ரபந்ந இதி ச– ப்ரபந்நன் என்பதினாலும், நிர்பய:– பயமில்லாமல், ஸ்தோஷ்யாமி– ஸ்தோத்ரம் செய்யப்போகிறேன்.

முதல் ச்லோகத்தில் பிராட்டியை ஸ்தோத்ரம் செய்வது இயலாதகார்யம் என்றுசொன்ன பிறகு, மறுபடியும் ஸ்தோத்ரம் செய்யப் புகுவானேன் என்ற சங்கை ஏற்பட, ஸ்தோத்ரம் செய்யப்படவேண்டிய பிராட்டியின் மேன்மையைக் குறிப்பிட்டு பிராட்டியினிடம் உள்ள அஸாதாரணமான தயை என்ற ஸௌலப்ய குணத்தைக் காண்பித்து ஸ்தோத்ரம் செய்யலாம் என ஸமாதானம் கூறுகிறார்.

'யஸ்யா: தே–' என்பது அஸாதாரணமான குணங்களைக்குறிக்கிறது. மஹிமாநம்– இரண்டு விபூதிகளுக்கும் சேஷியாக இருக்கையையும் எல்லையற்ற கல்யாணகுணங்களையும்குறிக்கிறது. ப்ரபு:– எல்லா வஸ்துக்களையும் நன்கு அறியக்கூடிய சக்தியையுடையவன். நாலம் மாதுமியத்தயா– அளவிட்டுத் தெரிந்துகொள்ளமுடியாதவன். ஸர்வசக்தனாகிய எம்பெருமான் இவ்விஷயத்தைத் தெரிந்துகொள்ளமுடியாதவன் என்பது எப்படிப் பொருந்துமெனில், நிரவதிம் என்பதனால் அளவிடப்படாதாகையால் பகவானுக்கும் இது ஸாத்யமாகவில்லை என்று கூறுவதில் தோஷமில்லை. பிராட்டியின் குணங்கள் அளவிடப்படக்கூடியதாயிருந்தால்தானே தெரிந்துகொள்ள முடியும். இதே கருத்தைத்தான் கூரத்தாழ்வான் 'देवि त्वन्महिमावधिर्न हरिणा नापि त्वया ज्ञायते यद्यप्येवमथापि नैव युवयोः सर्वज्ञता हीयते ॥ இதே அபிப்ராயத்தை வேதார்த்தஸங்க்ரஹத்தில் 'अनवधिकमहिममहिषी என்று ஸ்ரீபாஷ்யகாரர் ஸாதித்தார்.

த்வாம்— என்பதினால் ஸௌலப்யாதி குணாதிசயத்தினால் என்னுடைய ஸ்தோத்ரத்தை கேட்டு ஸந்தோஷித்து என்னை அனுக்ரஹிக்கிறாய் என்றும் பொருள் படும்.

ஸ்தோஷ்யாம்யஹம் நிர்பய:- பலவித அபராதங்களைச் செய்தும், உன்னுடைய மஹிமையை ஸ்தோத்ரம் செய்வதற்கு வேண்டிய ஜ்ஞானம், ஸாமர்த்யம், இவைகள் இல்லாதவனாயிருந்தபோதிலும் 'यतो वाचो निवर्तन्ते अप्राप्य मनसा' என்று வேதங்களே ஸ்தோத்ரங்கள் செய்யமுடியாத நிலையில், உனக்கு அடியேன் தாஸன் என்று உணர்ந்திருத்தலாலும் ப்ரபந்நன் என்ற வ்யாஜத்தினாலும், பயமற்றவனாக உன்னை ஸ்தோத்ரம் செய்யப் புறப்பட்டேன் என்கிறார். உன்னை ஆச்ரயித்த அடியேனுக்கு 'மறந்தும் புறந்தொழா மாந்தர்' என்றபடியாக அடியேனுக்கு ஈச்வரனல்லாத யாரிடத்திலும் அடியேனுக்கு பயமில்லை என்பதை உணர்த்தவே லோகைகேச்வரி என்கிறார். ஈச்வரசப்தத்தில் பகவானுக்கு மேற்பட்ட ஈச்வரன் (நியந்தா) இல்லை என்று காட்டப்படுகிறது. यो लोकत्रयमाविश्य बिभर्त्यव्यय ईश्वरः என்று. இப்பேர்ப்பட்ட எம்பெருமானுக்கு பத்நியாகிய உன்னுடைய அனுக்ரஹ விசேஷத்தினால் பகவானிடத்தில்கூட எனக்கு பயமில்லை என்று காட்டுகிறார் 'லோகநாத தயிதே' என்பதால். தயித என்ற பதம் பகவானுக்கு ப்ரியமானவள் என்பதைக் காட்டுகிறது. 'भयकृत् भयनाशनः' என்று பயத்துக்கும் அபயத்துக்கும் காரணமான எம்பெருமான் பிராட்டியின் இஷ்டத்துக்கு விரோதமாக நடக்கமாட்டான் என்பதையும் குறிக்கிறது. பிராட்டிக்கு தாஸன் என்பதை உணர்ந்தவனையும், அவளுடைய ஆஜ்ஞைக்கு விரோதமாக நடக்காத ப்ரபந்நன் அடியேன் என்பதையும் குறிக்கிறது 'தாந்த' என்ற பதம். பகவானுடைய கருணையைக் காட்டிலும் அதிக கருணையுடையவள் பிராட்டி என்ற காரணத்தால் பிராட்டியினிடம் ப்ரபந்நனானவனுக்கு யாதொருவித பயமுமில்லை என்பதையும் குறிக்கிறது.

3. லக்ஷ்மியை ஸ்தோத்ரம் செய்வது இயலாத கார்யம் என்று முதலில் ஆக்ஷேபித்து அதற்கு ஸமாதானமாக ஸகலத்துக்கும் ஸ்வாமினியாயிருப்பதை (புருஷோத்தமனின் ப்ரியையாயிருப்பதை)யும் விளக்கிவிட்டு எல்லோராலும் ஆச்ரயிக்கத்தகுந்தவள் இவள். ஏனென்றால் எல்லா ப்ரயோஜனங்களுக்கும் இவள் காரணம் என்பதை சில த்ருஷ்டாந்தங்கள் மூலம் விளக்குகிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

காஞ்சிபுரத்தில் எங்கள் சொந்த தறியில் தயார் செய்யும் பட்டு சேலைகள்

காஞ்சிபுரம் விலைக்கே சேலத்தில் கொடுக்கப்படும்

கல்யாணகாலத்தை முன்னிட்டு
காஞ்சீபுரம், கொள்ளேகாலம், தருமாவரம், ஆரணி,
பட்டு சேலைகள், கண்ணைக் கவரும் சிறந்த
நாகரீகமான பார்டர்கள் 6 கெ,
8 கெ, 9 கெ, 9½ கெஜம்
சேலைகள் ஏராளமாக ஸ்டாக்
செய்திருக்கிறோம்

வெண்பட்டு 10X6, நூல் கோர்வை,
சரிகைபேட் 10X6, 8X8, 9X9,
ஜோடிகளும் மிகவும் மலிவான
விலையில் கிடைக்கும்

எங்கள் கடைக்கு நேரில்
விஜயம் செய்து ஜவுளிகள்
வாங்கி திருப்தியடையக்
கோருகிறோம்.

காஞ்சீபுரம் ஜவுளிக்கடை
கந்த விலாஸ்

போன் நெ.
123.

அ. கந்தசாமி முதலியார்
& சன்ஸ்

கடை வீதி: சேலம் 1.

உரிமையாளர்:-

அ. க. தங்கவேல் முதலியார்.

ஹெட் ஆபீஸ்:- காந்திரோடு, காஞ்சீபுரம். போன்: 12.

பிராஞ்சுகள்:-	போன்: 71557,	போன்: 121,	போன்: 123,
213, தங்கசாலை தெரு	மைலாப்பூர்	கீழ் ரதவீதி	கடை வீதி
மதராஸ்—1.	மதராஸ்—4.	திருநெல்வேலி	சேலம்—1.

மேட்டூர், பென்னி மில் ஜவுளிகளும் கிடைக்கும்.

210745

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

[ஹேமலம்பி ௵ தக்ஷிணாயநம் - சரத் ருது, வ்ருச்சிக ௴ 1957 ௵ நவம்பர் ௴ – டிஸம்பர்]

16-11-57 கார்த்திகை ௴ 1௳ சனிக்கிழமை வ்ருச்சிக ரவி 3-44, விஷ்ணுபதி, ஸங்க்ரமண தர்ப்பணம், வ்ருச்சிகக்ருஷ்ணதசமிதிதி.

17-11-57 2௳ ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி திதி.

18-11-57 3௳ திங்கட்கிழமை ஏகாதசி வ்ரதம்.

21-11-57 6௳ வியாழக்கிழமை ● அமாவாஸ்யை.

25-11-57 10௳ திங்கட்கிழமை **பூராடம், 43-வது பட்டம் ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன்**

26-11-57 11௳ செவ்வாய்க்கிழமை உத்திராடம், 34-வது பட்டம் [திருநக்ஷத்ரம்.
ஸ்ரீ சடகோபராமாநுஜ யதீந்த்ரமஹாதேசிகன்

3-12-57 18௳ செவ்வாய்க்கிழமை கைசிகஏகாதசி வ்ரதம். [திருநக்ஷத்ரம்.

6-12-57 21௳ வெள்ளிக்கிழமை ○ பூர்ணிமைதிதி, கிருத்திகை, வைகாநஸ தீபம், திருமங்கைமன்னன், நம்பிள்ளை, 5-ம் பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திரு

7-12-57 22௳ சனிக்கிழமை ரோஹிணீ, பாஞ்சராத்ர தீபம், [நக்ஷத்ரம்.
திருப்பாணாழ்வார் திருநக்ஷத்ரம், திருக்கார்த்–

12-12-57 27௳ வியாழக்கிழமை மகம், 31-வதுபட்டம் ஸ்ரீமந்நாராயண[திகை.
வேதாந்த யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

15-12-57 30௳ ஞாயிற்றுக்கிழமை சாபரவி 34-8, ஷடசீதி, ஸங்க்ரமண தர்ப்பணம், வ்ருச்சிக க்ருஷ்ண நவமி திதி, திருப்பள்ளியெழுச்சி.

[தக்ஷிணாயநம் – ஹேமந்தருது - சாப ௴]

16-12-57 மார்கழி ௴ 1௳ திங்கட்கிழமை சாப க்ருஷ்ண தசமிதிதி.

17-12-57 2௳ செவ்வாய்க்கிழமை ஏகாதசி.

18-12-57 3௳ புதன்கிழமை த்வாதசி- த்ரயோதசி திதித்வயம், விசாகம், 30-வது பட்டம் ஸ்ரீநிவாஸவேதாந்த யதீந்த்ர மஹாதேசிகன், 40-வது பட்டம் ஸ்ரீரங்கநாத சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

19-12-57 4௳ வியாழக்கிழமை சதுர்தசிதிதி.

20-12-57 5௳ வெள்ளிக்கிழமை ● அமாவாஸ்யை, கேட்டை, தொண்டரடிப் பொடியாழ்வார், பெரியநம்பிகள் திருநக்ஷத்ரம்.

24-12-57 9௳ செவ்வாய்க்கிழமை சதுர்த்தி திதி.

25-12-57 10௳ புதன்கிழமை அதிதி.

26-12-57 11௳ வியாழக்கிழமை பஞ்சமி திதி.

28-12-57 13௳ சனிக்கிழமை பூரட்டாதி, 41-வது பட்டம் ஸ்ரீ லக்ஷ்மீந்ரு ஸிம்ஹசடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷ

31-12-57 16௳ செவ்வாய்க்கிழமை அச்வநீ, 8-வது பட்டம் ஸ்ரீ பராங் [த்திரம்.
குச யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.

Regd. No. M. 4437.

இந்தியன் பாங்க், லிமிடெட்

(ஸ்தாபிதம் : 1907.)

தலைமை ஆபீஸ் : "இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்", வடக்கு பீச் ரோடு,
மதராஸ்-1.

தென் இந்தியாவில் முழுவதிலும், பம்பாய், கல்கத்தா, புது டில்லி, கொழும்பு, சிங்கப்பூர், F.M.S. முதலிய இடங்களில் கிளை ஆபீஸ்கள் இருக்கின்றன.

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	ரூ.	63,83,130
ரிசர்வ் & இதர நிதிகள்	...	ரூ.	79,75,000
டெபாஸிட்டுகள் (31-12-56-ல்)	...	ரூ.	32·56 கோடிகள்

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் கவனிக்கப்படும்.

D. P. பார்த்தசாரதி, B.A. (Hons), B.L., செக்ரெட்டரி.

ஓர் அறிவிப்பு

பல அபிமானிகளுடைய யோசனையின் பேரில்

"ஸ்ரீ மாலோல பிரஸ்" காலண்டர்

இவ்வருஷம் விசேஷ முறையில் அச்சிட்டு 1958 ஆம் ஜனவரி மீ 1வக்குள் வெளி வருமென்று தெரிவித்துக் கொள்ளுகிறோம். 1957 வருஷத்திய காலண்டர் வேண்டுமென்று எழுதியிருந்தவர்களுக்கு கைவசமில்லாமையால் அனுப்பமுடியாமல் போய்விட்டது. ஆகவே காலண்டர் தேவையுள்ளவர்கள் முன்னதாகவே ஆர்டர் செய்து வரவழைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு திவ்யதேசத்தெம்பெருமான் திருவுருவப் படத்துடனும், தமிழ், இங்கிலீஷ் தேதிகள், பஞ்சாங்கக்குறிப்பு முதலியவற்றுடனும் அச்சிடப்பட்டுள்ளது. விலை 0-6-0 (37காசுகள்) தபால் செலவு ஒரு அணா. தபால் மூலம் அனுப்ப 44 காசுகளுக்கு தபால் பில்லை முன்னதாக அனுப்ப வேண்டும். குறைந்த காபிகளே அச்சிட்டிருப்பதால் தேவையானவர்கள் முன்னதாக ஆர்டர் செய்யும்படி கோருகிறோம். ஒரே தடவையில் 10 காலண்டர் வாங்குபவர்களுக்கு 8 அணா கமிஷன் கொடுக்கப்படும்.

மானேஜர், ஸ்ரீ மாலோல பிரஸ்,
திருவள்ளூர், செங்கல்பட்டு ஜில்லா.